பக்கங்கள்: பதினாறு+II=18

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 08 வியாழக்கிழமை (24.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 302

# ஜனவரிக்கு முன் மீள் குடியேற்றம்;

# ஐ.நாவுக்கு ஜனாதிபதி வாக்குறுதி

## தவறினால் அவர் மீதான நம்பிக்கை கெட்டுவிடும் என்கிறார் கீ-மூன்





கொழும்பு, செப்ரெம்பர். 24

"இலங்கையில் வவுனியா முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் அனைவரும் எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் நிச்சயம் தங்கள் தங்கள் சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்படுவார்கள் என்று இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா. பிரதிநிதிக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார். இந்த வாக்குறுதியை நிறைவேற்ற அரசு தவறினால் ஜனாதிபதி மஹிந்த மீதான நம்பிக்கை கெட்டுப்போய்விடும். எனவே இனியாவது வாக்குறுதிகளை ஜனாதிபதியும் அவரது அரசும் நிறைவேற்றவேண்டும்"

- இப்படி வலியுறுத்தியிருக்கிறார் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் - கீ மூன். (16 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா, பூந்தோட்டம் முகாமில் இராணுவம்–அகதிகள் களேபரம்!

## நிலைமையைக் கட்டுப்படுத்த மேலதிக பொலிஸார்

வவுனியா, செப்.14

வவுனியா பூந்தோட்டம்அகதி முகாமில் உள்ளவர்களுக்கும் இராணுவத்தினருக்கு இடையே நேற்று களேபரம் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகாமைச் சேர்ந்த ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்தே இருதரப்பினருக்கும் இடையில் களேபரம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக அப்பகுதிக்கு மேலதிக பொலிஸார் அனுப்பப்பட்டனர்.

முகாமைச் சேர்ந்த ஒருவர் அங்கிருந்து தப்பி வெளியே சென்றுவிட்டு மீண்டும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இனிமேல் நடக்காமல் இருக்க நடவடிக்கை

கொழும்பு, செப். 24

வவுனியா- பூந்தோட்டம் அகதி முகாமைச் சேர்ந்த ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற (16 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் - I பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் - II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்

# வெற்றிலைக்கேணிக் கடலில் படகு கவிழ்ந்தது;

## 2 மீனவரைக் காணவில்லை; ஒருவரை தென்னிலங்கையர் காப்பாற்றினர்!

வடமராட்சி, செப். 24

பருத்தித்துறை முனைப்பகுதியில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்றொழிலுக்குப் புறப்பட்ட படகு கவிழ்ந்தது; அதில் சென்ற இரு மீனவர்களைக் காணவில்லை; ஒருவர் தப்பினார்.

பருத்தித்துறை முனைப்பகுதியைச் சேர்ந்த அன்ரன் யோசேவ் வெஸ்ரின் (வயது 49), கரவெட்டியைச் சேர்ந்த தம்பிராசா பரராஜசிங்கம் (வயது 59) ஆகியோரையே காணவில்லை. கற்கோவளத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் வரதராஜா (வயது33) என்பவரே தப்பிக் கரைசேர்ந்தவராவார்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

முனைப் பகுதியில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மூவரும் தொழிலுக்குப் புறப்பட்டனர். வெற் (16 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய மட்டக் கோலூன்றிப் பாய்தலில் அருணோதயா மாணவி தனுஷா புதிய சாதனை



யாழ்ப்பாணம்செப்.24

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி சண்முகராஜா தனுஷா தங்கப்பதக்கத்தை வென்றுள்ளதுடன் புதிய சாதனை ஒன்றையும் படைத்துள்ளார்.

சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்றுப் புதன்கிழமை 19 வயதுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டி (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் வருவதற்கான பாஸ் வழங்கும் நிலையம் வவுனியா நகரப் பகுதிக்கு மாற்றப்படும்

### கூட்டமைப்பினருடன் நடத்திய பேச்சில் பஸில் இணக்கம்

வவுனியா, செப். 24

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் பயணிகளுக்கு பாஸ் வழங்குவதற்கு ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாஸ் அனுமதி வழங்கும் நிலையத்தை வவுனியா நகரப்பகுதிக்கு மாற்ற அரசு இணங்கியுள்ளது.

வடக்கின் மீள் குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்குமான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷவுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. தலைமையகம் முன்பாக புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, செப். 24

இலங்கையில் இரத்தக்களரியை தடுத்து நிறுத்துவதற்கு ஐ.நாவும், அதன் செயலாளர் நாயகமும் தவறிவிட்டனர் என்று குற்றஞ்சாட்டி, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய நாடுகள் சபையின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் புனர்வாழ்வு முகாம்களை கிழக்குக்கு மாற்ற நடவடிக்கை

கொழும்பு, செப். 24

முன்னாள் புலி உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு வழங்குவதற்கென வவுனியாவில் நடத்தப்பட்டு வரும் புனர்வாழ்வு நிலையங்கள் (16 ஆம் பக்கம் பார்க்க)

# 3 வருடங்களுக்கு ஜி.எஸ்.பி. சலுகையை நீடிக்க ஐரோப்பிய ஒன்றியத்திடம் அரசு வேண்டுகோள்

## ஆனால் விசாரணைகளுக்கு இடம்கொடோம் என்கிறார் ஜீ.எல்.பீரிஸ்

கொழும்பு, செப். 24

'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை மூன்று வருடங்களுக்கு நீடித்துத்தருமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை அரசு விண்ணப்பித்துள்ளது என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

அதற்காக இலங்கையை சர்வதேச விசாரணைக்குட்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு ஒரு போதும் இலங்கை அரசு இடங்கொடுக்காது என்றும் அவர் சொன்னார்.

'ஜி.எஸ்.பி.பிளஸ்' -தொடர்பான தற்போதைய நிலைமை தொடர்பாக ஐ.தே.கட்சி எம்.பி. ரவி கருணா[illegible] போதே அவர் இவ்வாறு கூறினார். அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:- (16 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோர் விவகாரங்களுக்கான ஐ.நா. அதிகாரி நாளை வவுனியா, மன்னாருக்கு

கொழும்பு செப் 24

நேற்றுக் கொழும்புக்கு வந்து சேர்ந்துள்ள ஐ.நா செயலாளர் நாயகத்தின் இடம் பெயர்ந்தவர்களின் மனித உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி வால்டர் கெய்லின் நாளை மன்னாருக்கும் வவுனியாவுக்கும் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்நுட்ப அலுவலர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 24

தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு (தரம் III பயிற்சி) ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர் முகப்பரீட்சை இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும். வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதிப்பிரதம செயலாளர் தி. இராசநாயகம் தலைமையில் மேற்படி நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

தெரிவு செய்யப்பட்ட 26 பேரும் யாழ் .பிராந்திய ஆணையாளர் அலுவலகத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1-302)

## கண்ணீர் அஞ்சலி



### சிவசம்பு செந்தில்நாதன்

(முகாமையாளர் இலங்கை வங்கி
உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்
யாழ்ப்பாணம்)

சரிந்ததே வங்கியின் கலங்கரை விளக்கு
மென்மையான போக்கு மென்மையான சுபாவம்
உண்மை, நேர்மை சேர் உத்தமராய்
எங்கள் செந்தில் ஐயா சென்ற தெங்கேயென்று
வங்கி சமூகமே வலு விழந்து விம்மி நிற்க
பொங்கி வரும் விழி நீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

**முகாமையாளரும் ஊழியர்களும்**
**இலங்கை வங்கி, காங்கேசன்துறைக்கிளை**

89178

## மரண அறிவித்தல்

### அமரர் ஆழ்வாப்பிள்ளை அப்புக்குட்டி



கொடிகாமம், தவசிக்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆழ்வாப்பிள்ளை அப்புக்குட்டி நேற்று (23.09.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் கணவரும் வேலாயு5ம், மயில்வாகனம், அமிர்தலிங்கம், க... ணசலிங்கம், ஆகியோரின் தந்தையாரும் பரமேஸ்வரி, வசந்தினி, இந்திராணி, றஞ்சினி ஆகியோரின் மாமனாரும், நிறோசன், நிசாந்தன், நிதர்சன், நிறுசன், கெமி, யெராட், மெயோ, வசிகரன், சுகிர்தன், சுஜீவன், அபிராமி, அபிசாலினி, ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2009) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 4மணியளவில் ஈச்சங்காடு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவசிக்குளம்,
கொடிகாமம்.

தகவல் :
அமிர்தலிங்கம்
(மகன்)

## தகவல் தொழில் நுட்ப செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 24

வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகியவற்றில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இருநாள் செயலமர்வு எதிர்வரும் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் கணனி ஆய்வு கூடத்தில் நடைபெறவுள்ளது.

## "தேசிய சைகை" இறுவட்டு வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், செப். 24

''தேசிய சைகை'' என்ற தலைப்பிலான இறுவட்டு வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் த.வரதராஜாவும் கலந்து கொள்வர்.

கைதடி நவீல்ட் பாடசாலையும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து இந்த இறுவட்டைத் தயாரித்துள்ளன. (1)

## முன்பள்ளி ஆசிரியர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 24

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு மீசாலை வடக்கு பொது மண்டபத்தில் நடைபெறும்.

மாவட்ட கண்காட்சி, வலய மட்ட விளையாட்டு விழா, ஆசிரியர் தினம், கலைவிழா போன்ற விடயங்கள் ஆராயப்படவிருப்பதால் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1-207)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்ப கனடா பிரஜா உரிமையுள்ள 28வயது நட்சத்திரம் பூசம் தோசம் இல்லாத 12செவ்வாய் உடையவருக்கு மணமகள் தேவை.

தொ.பே-0777066487

## மரண அறிவித்தல்கள்

### அமரர் கந்தர் மார்க்கண்டு



வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு இராமாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் மார்க்கண்டு நேற்று (23.09.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பராசக்தியின் கணவரும் ரதிமோகன்(அஞ்சலகம், கொடிகாமம்), சிறிமோகன் (இ.போ.ச வடக்கு செயலாற்றுப் பகுதி), ஜெயமோகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் அமரர் தேன்மொழி, வசந்தராணி (குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர், மந்துவில்), கீதா (பருத்தித்துறை சித்திவிநாயகர்), வினோதா (தாதிய உத்தியோகத்தர், திருமலை), தேனுசன், கேதுசன், மாதினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவர்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2009) வியாழக் கிழமை பி.ப 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில்தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

கச்சாய் வடக்கு,
கொடிகாமம்.

தகவல் :
ரி. இராசநாயகம்

### திருமதி கமலசரஸ்வதி பாலசிங்கம்



காங்கேசன்துறை முதலாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் சுதுமலை அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம். கமலசரஸ்வதி 21.09.2009 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை-அன்னபரிபூரணி தம்பதியினரின் அன்பு மகளும் பாலசிங்கத்தின் (கனடா) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான-நாகலிங்கம், செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், மேகலா, சசிகலா,மங்களேஸ்வரி, பலராமன், ஆகியோரின் அன்புத்தாயும், சிவநாதன், பாலச்சந்திரன், சிறீஸ்கந்தராசா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2009) வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை அம்மன் கோவிலடி,
(விக்கி சைக்கிள் கடை முன்)
சுதுமலை மேற்கு,மானிப்பாய்.
தொ.பே:0778146947 (89109)

தகவல் :
குடும்பத்தினர்





நன்மைகள்

# வேலை வாய்ப்பு

இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க!



இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான
யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்குப் பின்வரும் பதவிகளுக்குத்
தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

## பதவி வெற்றிடங்கள்










- காப்புறுதி ஆலோசகர் → பதவி-1
- பதவி-2: தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- பதவி-3: சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- பதவி-4: தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- பதவி-5: சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- பதவி-6: முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பதவி-7: உதவி முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- பதவி-8: முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- பதவி-9: சிரேஷ்ட முகவர் அபிவிருத்தி முகாமையாளர்

அடிப்படைத் தகைமைகள்:- க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த), வியாபாரத்துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள், காப்புறுதித்துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள், கல்வித் தகைமையுடன் விளையாட்டுத்துறையில் திறமையுள்ளவர்கள், தற்போது A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களும் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம். நன்மைகள்: நிரந்தர அடிப்படைச் சம்பளத்துடனான வேலை வாய்ப்பு (பதவி 6, 7, 8, 9), பயிற்சிக் காலத்தின்போது மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும்.




**தகைமையுடன் உங்களிடம் நாம் எதிர் பார்ப்பது?**

- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்
- திடசித்தம்

ஏன் தயக்கம் : தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிவரக் கோவையுடன்

நேர்முகத் தேர்வு:
காலம் : திங்கட்கிழமை 28.09.2009
நேரம் : முற்பகல் 9.30
இடம் :யூனியன் அஷ்யூரன்ஸ் (139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

தொடர்புகளுக்கு : தொ.பே: 0212223753, 0773039582 ஜீ.சிறீவரதன் (அபிவிருத்தி முகாமையாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தீர்வைத் திசை திருப்பும் முயற்சி

இனப்பிரச்சினைக்கான தீர்வாக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு காத்திரமான திட்டம் ஒன்றைக் கொண்டு வரும் எனப் பார்த்திருந்த சர்வதேச சமூகத்துக்கும் அது விடயத்தில் தாங்கள் இலவு காத்த கிளிதான் என்பது ஓரளவுக்குப் புரிந்துவிட்டது. அதனால் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் மீது அதிகம் நம்பிக்கை வைத்து, அதன்மூலம் காத்திரமான தீர்வு வரும் என்று தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள் என்று 'கயிறு கொடுக்கும்' வழமையான பேச்சை, இப்போது பெரும்பாலான மேற்குலக இராஜதந்திரிகள் நிறுத்திக் கொண்டுவிட்டார்கள்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண மட்டும் அதுகுறித்து ஆங்காங்கே முழங்குகின்றமை மட்டுமே அவ்வப்போது இடம் பெறுகின்றது.

மலையைக் கெல்லி எலியைப் பிடித்த மாதிரி சுமார் நூற்றியெழுபத்தியைந்து அமர்வுகளை, பல ஆண்டுகளாக நடத்திப் பெற்றுக் கொண்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் சிபாரிசு, அதன் சுருக்க வடிவம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பூர்வாங்கப் பரிசீலனைக்கு ஒப்படைக்கப்பட்ட நிலையோடு கிடப்பில் போடப்பட்டுவிட்டது போலும்.

அந்த யோசனைகள் தொடர்பில் அக்குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண வெளியிட்ட கருத்துக்களை ஒட்டி வெகுஜன அரசியல் மாத இதழான 'புதிய பூமி' தனது செப்ரெம்பர் மாத இதழின் தலைப்புச் செய்தியில் சுட்டிக் காட்டியிருக்கும் சில விடயங்கள் இங்கு நோக்கற் பாலவை.

அமைச்சர் திஸ்ஸ விதாரண யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையில் மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வதற்கு ஜனாதிபதி விரும்பவில்லை என்றும் -

ஜனாதிபதியின் அங்கீகாரத்தின் பின்னரே அரசியல் தீர்விற்கான யோசனைகள் முன்வைக்கப்படும் என்றும் - கூறியிருக்கிறார் என்பதை அந்த இதழ் தொட்டுக்காட்டியுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு எதுவும் ஜனாதிபதியின் விருப்பத்திற்குட்பட்டவையாக மட்டுமே இருக்கவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இந்த விடயத்தை அணுகுவது நியாயமற்றது என்பதையும், அத்தகைய தீர்வு தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்பவையாகவே இருக்கவேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் நிலைப்பாடாகும் என்பதையும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

மிகப் பொருத்தமான - மிகச் சரியான - கருத்து நிலைப்பாடு இது என்பதை விதந்துரைக்கிறோம்.

அத்தோடு இன்னொரு விடயத்தையும் தமிழ் மக்கள் சார்பில் அனைத்துக் கட்சிக் குழுவுக்கும் அதன் தலைவருக்கும் இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது தவிர்க்க முடியாததாகும்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவை அமைத்தவர் - அதன் அழைப்பாளர் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷாவாக இருக்கலாம். ஆனால் குழுவின் தீர்மானம் என்பது குழு அங்கத்தவர்களின் முடிவாக இருக்கவேண்டுமே தவிர, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முடிவாகவோ அல்லது கட்டாயம் அவருக்கு இசைவான - விருப்பமான - முடிவாகவோ மட்டுமே இருக்கவேண்டும் என்பதல்ல. வேண்டுமானால், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியின் தலைவர் என்ற வகையில் - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ என்ற ரீதியில் - அனைத்துக் கட்சிக் குழு அவரது கருத்தை உள்வாங்கிக் கொள்ளலாம்.

அதை விடுத்து, ஜனாதிபதி விரும்புவதையே தீர்வுத் திட்டமாகத் தான் முன்மொழியவேண்டும் - முன்மொழிய முடியும் - என அனைத்துக் கட்சிக் குழு முடிவு செய்து அதன்படி நடக்குமானால், அதற்கு 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு' என்ற பெயரே பொருத்தமற்றதாகிவிடும். ஜனாதிபதியின் 'றப்பர் ஸ்டாம்பு' அமைப்பாக அது உறுதிப்படுத்தப்பட்டுவிடும்.

ஏற்கனவே அந்த நிலையில்தான் அது இயங்கிக் கொண்டிருக்கின்றது என்ற பொதுவான கருத்து நிலைப்பாடு - குற்றச்சாட்டு - நிலவுவதையும் நாம் மறைக்க முடியாது.

அடுத்து 'புதிய பூமி' சஞ்சிகை சுட்டிக்காட்டும் மற்றொரு விடயமும் கவனிக்கத்தக்கது.

இந்தியப் பஞ்சாயத்து முறையும், செனட் சபையும் அரசியல் தீர்வு யோசனைத் திட்டத்தில் இடம்பெறும் என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறுவதை அப்பத்திரிகை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இந்த இரு விடயங்களையும் பெரிய விவகாரமாகக் காட்டி ஆலாபனை பண்ணுகிறார் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர்.

இந்தியப் பஞ்சாயத்து முறையை ஏற்படுத்துவதும், செனட்சபை ஸ்தாபிப்பதும் இலங்கை இனப்பிரச்சினை விடயத்துக்குத் தீர்வாகா என்பதைத் தெளிவுபடுத்தும் அச்சஞ்சிகை, இவ்விடயங்களைப் பெரிதுபடுத்தி பிரபலாபிப்பது தீர்வைத் திசை திருப்பும் எத்தனம் எனவும் சாடுகின்றது.

''வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு' எனப் பதிலளிப்பது போன்று'' - தீர்வு விவகாரத்தில் தொடர்பற்ற விடயங்களை இப்படி முன்னிலைப்படுத்தும் திசை திருப்பு முயற்சிகள் உண்மையில் கண்டிக்கப்படவேண்டியவையே.

தீர்வு என்ற பெயரில் பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொள்ளும்படி தமிழ் மக்களை நிர்ப்பந்திப்பதன் மூலம் பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியாது என்று 'புதிய பூமி' சஞ்சிகை வெளிப்படையாக சுட்டிக்காட்டும் அம்சத்தை தென் இலங்கை ஆட்சிப்பீடம் கவனத்தில் கொள்ள வேண்டும். கவனத்தில் கொள்ளுமா கொழும்பு.....?

### யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான

# பத்துலட்சம் இலவசப் பாடநூல்கள் ஏ-9 ஊடாக நாளை யாழ்.வந்து சேரும்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்குரிய 10 லட்சம் இலவச பாடநூல்கள் ஏ-9 பாதையூடாக நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவுள்ளன.

இத்தகவலை மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களின் அடுத்த ஆண்டு கல்விச் செயற்பாட்டுக்காக சுமார் பத்து லட்சம் பாடநூல்கள் நாளை கொழும்பிலிருந்து இங்கு ஏ-9 பாதை ஊடாக எடுத்து வரப்படுகின்றன.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் கொழும்பில் இடம்பெற்று பாடநூல்கள் யாவும் வாகனங்களில் ஏற்றப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் அவை நாளை இங்கு எடுத்துவரப்படவுள்ளன.

இங்கு பாடநூல்கள் எடுத்துவரப்பட்டதன் பின்னர் அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்காக வலய ரீதியாகவும் கோட்ட ரீதியாகவும் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

மூன்றாம் தவணை விடுமுறையின் போது மாணவர்களுக்கான இலவசப் பாடநூல்களை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கல்வியமைச்சு நேற்று 10 லட்சம் பாடப்புத்தகங்களையும் கொழும்பிலிருந்து தரைவழியாக அனுப்பிவைத்தது.

தரைவழியாக அனுப்பிவைப்பதன் மூலம் அதற்கான செலவீனம் அரைவாசியாகக் குறைந்துள்ளது என கல்வி அமைச்சு அறிவிக்கின்றது.

முன்னைய வருடங்களில் யாழ். குடாநாட்டுக்கு கப்பல் மூலம் புத்தகங்களை எடுத்துச்செல்வதற்கு மூன்று மில்லியன் ரூபா செலவாகியதாகவும் இம்முறை ஏ-9 வீதியினூடாக இவற்றைக் கொண்டுசெல்வதால் 1.3 மில்லியன் ரூபாவே செலவாகுவதாகவும் அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

28 வருடங்களுக்குப் பின்னர் முதல்தடவையாக யாழ்.குடாநாட்டு மாணவர்களுக்கு அடுத்த ஆண்டுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள் ஏ-9 வீதியினூடாக எடுத்துச்செல்லப்படுவதாகக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

பாடப்புத்தகங்களை எடுத்துச் செல்லும் லொறிகள் நேற்று முற்பகல் 10.30க்கு கல்வியமைச்சிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டன. (50-9)

# தொல்லியல்துறை சார்ந்த ஆராய்ச்சிப் பணிகள் வடபகுதியில் முன்னெடுக்கப்படுவது அவசியம்

### அமைச்சர் டக்ளஸிடம் பட்டதாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

தொல்லியல்துறை சார்ந்த ஆராய்ச்சிகள் வடபகுதியில் முன்னெடுக்கப்படுவது அவசியம் எனத் தொல்லியல் துறைப் பட்டதாரிகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் எடுத்து விளக்கியுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் தொல்லியல்துறைப் பட்டப்படிப்பை நிறைவு செய்த சுமார் 25இற்கும் மேற்பட்ட பட்டதாரி மாணவர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தொல்லியல்துறைக்கான பட்டப்படிப்பை நிறைவு செய்து நீண்ட காலமாகியும் தமக்கான துறைசார்ந்த தொழில்வாய்ப்புகள் எதுவும் வடபகுதியில், குறிப்பாக யாழ்.குடாநாட் டில் வழங்கப்படாதுள்ள நிலை குறித்துப் பட்டதாரிகள் அமைச்சரிடம் எடுத்துக் கூறியுள்ளதுடன், தொல்லியல்துறை சார்ந்த ஆராய்ச்சிகள் வடபகுதியில் முன்னெடுக்கப்படுவதன் அவசியம் மற்றும் அதன் அடிப்படையிலான பதவி நியமனங்களின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கிக் கூறியுள்ளனர்.

தொல்லியல்துறைப் பட்டதாரிகள் தெரிவித்த கருத்துக்களைச் செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாகத் தெரிவித்தார். இச்சந்திப்பின் போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் மற்றும் தொல்லியல் துறை சார்ந்த விரிவுரையாளர்கள் பலரும் கலந்துகொண்டனர் என அமைச்சு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

# நலன்புரி நிலையங்களில் உள்ள சாதாரணதர மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லை

### உரியவர்கள் கவனம் செலுத்துமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப் 24

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மற்றும் நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ள ஜீ.சி.ஈ சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்ப தற்கான ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்ட திணைக்களம் மேற்கொள்ளவில்லை என மாணவர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அதனால் அந்த மாணவர்கள் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களிலும், நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்களிலும் ஜீ.சி.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்களை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இது வரை சம்பந்தப்பட்ட திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இரண்டு மாதங்களுக்கு முன்னர் முடிவடைந்துள்ளமையால் தாம் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விசேட ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (50-9)

### வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 24

உடுவில், தெல்லிப்பழை கோட்டங்களைச் சேர்ந்த தரம்-8 இல் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு 26ஆம் திகதி சனிக்கிழமையும், சண்டிலிப்பாய், சங்கானை கோட்டங்களைச் சேர்ந்த மேற்படி ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமையும் மானிப்பாய் ஆசிரியவள நிலையத்தில் நடைபெறும்.

தரம்-8 இல் குடியுரிமைக் கல்வியும் வாழ்க்கைத் தேர்ச்சியும் கற்பிப்பவர்களுக்கான வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 4 ஆம் திகதி மானிப்பாய் ஆசிரிய வள நிலையத்திலும் நடைபெறவுள்ளது. (50-38)

### நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 09 | 25.09.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | மு.இ. 11.40 வரை |
| நட்சத்திரம்: | கேட்டை |
| | மு.இ. 07.02 வரை |
| சுபநேரம்: | 06.02 - 07.32 |
| ராகுகாலம்: | 10.32 - 12.02 வரை |

# ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் திங்களன்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும்

யாழ்ப்பாணம், செப்.24

யாழ்.செயலகத்தின் ஆள்பதிவுத் திணைக்களத்திற்கு ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பிலிருந்து யாழ்.எடுத்துவரப்படுகின்றன.

இத்தகவலை யாழ்.செயலகத்தின் ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.செயலகத்தின் ஆள்பதிவுத் திணைக்களத்திற்கு கடந்தவாரம் மாணவர்களுக்கான ஒரு தொகுதி அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டன. அந்த அடையாள அட்டைகள் பிரதேச செயலகங்கள் ஊடாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் இருந்து தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்து மிக நீண்ட நாள்களாகியும் அடையாள அட்டை கிடைக்கப்பெறாதவர்களுடைய ஒரு தொகுதி அடையாள அட்டைகள் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். செயலகத்திற்குஎடுத்து வரப்படவுள்ளன.

அவ்வாறு எடுத்துவரப்படுகின்ற தேசிய அடையாள அட்டைகள் பிரதேச செயலகங்கள் ஊடாக அந்தந்தப் பிரிவு கிராம உத்தியோகத்தர்களுக்கு, அனுப்பிவைக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (50-9)

### பொலிஸாரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்து இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், செப். 24

கச்சாய் பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

பாலாவி தெற்கைச் சேர்ந்த சின்னராசா சுதர்சன் (வயது - 29) என்ற இளைஞரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். கொடிகாமம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததிலேயே இந்த இளைஞர் காயமடைந்ததாக சாவகச்சேரி நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (50-207-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவகம் தெற்கு பிரதேசசபை - வேலணை
## கேள்வி அறிவித்தல்

எமது சபையினால் கீழ்வரும் வேலைகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்தத்தின் பெயர் | இக்ராட் பதிவு | மீளளிக்கப்படாத பிணைப்பணம் | மீளளிக்கப்படும் பிணைப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | மலசலகூடம் அமைத்தல் - சுறிகட்டுவான் | M9/C10 | 500.00 | 2000.00 |
| 02 | நூலக கட்டடத்திருத்தம் - உப அலுவலகம் புங்குடுதீவு | M9/C10 | 1000.00 | 5000.00 |
| 03 | நயினாதீவு மத்தி சனசமூக நிலையத்திருத்தம் - நயினாதீவு | M9/C10 | 1000.00 | 5000.00 |

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்த காரர்களிற்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

1. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
2. ICTAD வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
3. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
4. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரர் தனது புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விவரங்களை வேலை நாள்களில் முற்பகல் 8.30 இல் இருந்து பிற்பகல் 4.15 மணிவரை தீவகம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
6. ஆங்கில மொழியிலான ஒப்பந்த ஆவணங்களை 29.09.2009 முதல் 02.10.2009 வரை வேலை நாள்களில் முற்பகல் 9 மணியில் இருந்து பிற்பகல் 3 மணிவரை தீவகம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் மேலே அட்டவணையில் காட்டப்பட்டவாறு மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும் கட்டணங்களைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.
7. அந்தந்த வேலைக்குரிய பொறி வைத்த கேள்விகள் தலைவர், பிரதேச சபை கேள்விச்சபை, தீவகம் தெற்கு பிரதேச சபை என முகவரியிடப்பட்டு 05.10.2009 நண்பகல் 12 மணிக்கு முன்பாக பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும். அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். இதன் பின்னர் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் கூறுவிலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
8. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பேற்கமாட்டார்.

திருமதி ம.வசந்தகுமார்
தலைவர்,
பிரதேச சபை கேள்விச் சபை.

தீவகம் தெற்கு பிரதேச சபை,
வேலணை.

## மரண அறிவித்தல்
### திருமதி லதாமலர் நவரத்தினராசா



அல்வாய் வடக்கு, குமுதெணியை பிறப்பிடமாகவும், சுவிஸ்லாந்தில் வசித்தவரும், இல. 04, 1 ஆவது தெரு கற்பகாம்பாள் நகர், கொட்டிவாக்கம், சென்னை 41 ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லதாமலர் நவரத்தினராசா 22.09.2009 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் குமுதெணி காலஞ்சென்ற நமசிவாயம்-பிள்ளையம்மா தம்பதியினரின் அன்பு மகளும், க.நவரத்தினராசாவின் (சுவிஸ்) அன்பு மனைவியும், மேகரூபன் (Mechanical, Engineer), சுவீபன் (Civil Engineering, 1st year, S.R.M University, Chengalpattu), நிஸ்ரிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ந.கிருஸ்ணானந்தா (சுவிஸ்), நடராசா - தங்கமலர், குலவீரசிங்கம் - வனிதாமலர் (சுவிஸ்), ந.தர்மபாலன் (சுவிஸ்), ந.ஜெயபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*குமுதெணி,*
*அல்வாய் வடமத்தி,*
*அல்வாய்.*
*தொ. பே: 0776914148*

தகவல்:
ந.ஜெயபாலன்
(சகோதரன்).

## வாணிவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 24

வாணி விழாவையொட்டி விசேட நிகழ்வுகள் நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளன.

செயலக நலன்புரிக் கழகத்தின் தலைவர் ம.வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கத்தின் ஆசியுரையும் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவும் பக்திப்பாடல்கள், பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. (1)

* * *

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்.மத்திய கல்லூரியில் வாணி விழா நிகழ்வுகள் நாளை காலை 9.30 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் பிரதம விருந்தினராகவும் சொல்லின் செல்வர் இரா செல்வவடிவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (1)

* * *

யாழ்ப்பாணம், செப். 24

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவக பிரதேசத்துக்கான நவராத்திரி நிகழ்வு நாளை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆர்.ரி.ஜெயசீலன் கலந்து கொள்வார். ''சக்தி வழிபாடுகளில் நவராத்திரி'' என்ற தலைப்பில் இராசையா ஸ்ரீதரன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (1)

* * *

யாழ்ப்பாணம், செப். 24

தேசிய சேமிப்பு வங்கி வடமாகாண அஞ்சல் வங்கியின் வாணி விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் முகாமையாளர் இராஜா மகேந்திர சிங்கம் தலைமையில் வங்கியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பூஜையை தொடர்ந்து, ஊடகவியலாளர் சச்சிதானந்தனின் சமயச் சொற்பொழிவும், நாவலர் மகா வித்தியாலய மாணவர்களின் குழுப்பாடலும், செல்வி நிவேதிதா பரமேஸ்வரனின் வயலின் இசையும் இடம்பெறும். (1)

## விசேட கல்வி பொறுப்பாசிரியர்களுக்கு வலயத்தில் நாளை கூட்டம்

யாழ்.கல்வி வலய பாடசாலைகளில் உள்ள விசேட கல்வி பொறுப்பாசிரியர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொறுப்பாசிரியர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)


### வேலையாள் தேவை

Net Cafeக்கு கணனித்துறையில் ஓரளவு அனுபவம், ஆர்வமும் உள்ள பெண் ஊழியர் தேவை.
தொடர்பு: Telesoon (Inuvil)
(New Lanka பாம் முன்பாக)
T.P 0719134320

### வீடு விற்பனைக்கு

10B, ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் அமைந்துள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: ராஜா 077 3573117

### புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானம் (சிவன் கோயில்)

மேற்படி தேவஸ்தானத்திற்கு
மண்டப ஐயர்
பரிசாரகர் ஐயர்
தேவைப்படுகின்றனர்.
விரும்பியவர்கள்
அறங்காவலருடன் தொடர்பு கொள்ளவும்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை
சி. நாகராசா
அறங்காவலர்

மீண்டும் DR Mrs
S. நாகேந்திரா (MRCP)

### லங்கோ கிளினிக்கில்

(No.14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.)
தினமும் நோயாளர்களை பார்வையிடுகின்றார் என்பதனை அறியத்தருகின்றோம்.
நிர்வாகம்
லங்கோ கிளினிக்
89179


## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு
13 ★ 12 ★ 1967



இறப்பு
08 ★ 10 ★ 2008

### அமரர் தியாகராஜா சுரேந்திரன் (சுரேன்)

(ஆசிரியர், ஹைலண்ட்ஸ் கல்லூரி, ஹட்டன்)

திதி : நவமி 27.09.2009

எமது அன்புச் செல்வமே சுரேன்!
நீர் எமை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று ஆனது ஐயா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறாதையா உம் நினைவு!
உமது புன்முறுவல் பூத்த முகம், கனிவான பேச்சு என்றும் எம் நினைவில்
சாந்தமே உருவான சற்குணனே!
உமது ஆத்மா இறைவன் திருவடியில் சாந்தி பெற என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

இல. 28, 2 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
89170
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா தவயோகராசா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் முத்தையா தவயோகராசா நேற்றுமுன்தினம் (22.09.2009) செவ்வாய்க்கிழமை அரியாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - விசாலாட்சி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகம்மா தம்பதியினரின் மருமகனும் தர்மசவுந்தரியின் அன்புக் கணவரும் நிசாந்தின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*320, ஆனந்தன் வடலி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
தகவல்: மு.தனபாலசிங்கம்
(மைத்துனர்).

### திருமதி இராசரட்ணம் சிவபாக்கியம்



கோண்டாவில் கிழக்கு, ஞானவைரவர் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வாழ்ந்து வந்தவருமான திருமதி இராசரட்ணம் சிவபாக்கியம் நேற்று (23.09.2009) புதன்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பையா - செங்கமலம் தம்பதியினரின் அன்பு மருமகளும் பவளராணி, காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் கணேசலிங்கம், மங்கையர்க்கரசி, பாலசுப்பிரமணியம், பாலகருணாகரன், சந்திரமனோகரன், தெய்வராகினி, இராசேஸ்வரன், பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரந்தன்,*
*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.*
தகவல்:
இ.கணேசலிங்கம்
(மகன்).

### திருமதி பரிமளம் முத்துக்குமாரு



பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் முத்துக்குமாரு நேற்று 23.09.2009 புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை முத்துக்குமாருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் - இளையபிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் இளைய மருமகளும் இரஞ்சிதமலர், அற்புதமலர், (தேவா-ஜேர்மனி), யோகமலர் (மாலா) தவயோகராசா (சுகந்தன்-பிரான்ஸ்), சுகுணராசா (சுகுணன் - இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் எஸ். கே.ஏ ஆனந்தன் நாகேஸ்வரன் (நாகேஸ் - ஜேர்மனி), ஸ்ரீவிஜயநாதன் (உதயன் பப்ளிகேசன்ஸ்), யசோதா (பிரான்ஸ்) பத்மகமா (சுமா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தூரன் (புளோறிடா), நவஜீவன், தர்சன், அரவிந்தன், பிரதாபன், கேகயன், சதீஸ், சங்கீதா (ஜேர்மனி), ஜனனி, உஷாயினி, திலக்ஷன், நிருசன், அம்சாயினி, ஆகாஸ், அனிஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தேவகி, நர்மிதா ஆகியோரின் ஆசைப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*
தகவல்:
ம.ஸ்ரீவிஜயநாதன்
(உதயன் பப்ளிகேசன்ஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறவன்புலவு, தனங்கிளப்புப் பகுதிகளில் கைவிடப்பட்ட காணிகளில் விதைப்பை மேற்கொள்ள பதிவு செய்தோரில் 65 வீதமானோருக்கு விதைநெல்

நல்லூர்,செப்.24

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மறவன்புலவு, தனங்கிளப்புப் பகுதிகளில் கைவிடப்பட்ட நெற்செய்கைக் காணிகளில் விதைப்பை மேற்கொள்வதற்குப் பதிவு செய்த விவசாயிகளில் 65 சதவீதமானவர்களுக்கு விதை நெல் விநியோகிக்கப்பட்டுள்ளதாக பிரதி விவசாய பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பெரும்பாலும் விவசாயிகள் சிவப்பு நிற அரிசி நெல் வர்க்கங்களையே விதைத்து வருகின்றனர். எனவே அம்பாந்தோட்டை மாவட்டத்தில் செய்கை பண்ணப்படும் சிவப்பு நிற அரிசிவகையைச் சேர்ந்த ஏ.ரி 362 இன விதைநெல் ஆயிரத்து 556 புசல் மத்திய விவசாயத் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டுள்ளது. முருங்கன் விவசாய திணைக்களப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட பி.ஜி 406 இன விதை நெல்லில் 300 புசல் நெல்லும் இங்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஏனைய 35 சதவீதமான விவசாயிகளுக்கான விதை நெல் வந்து சேர்ந்ததும் உரிய முறையில் விநியோகிக்கப்படும் என விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார். (50- 111)

## பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலையின் பரிசளிப்பு விழா

சுன்னாகம், செப்.24

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் திருமதி கி. சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தினி அருளானந்தனும், சிறப்பு விருந்தினராக ஜே.ஆர்.எஸ். நிறுவன கல்வித் திட்ட இணைப்பாளர் ஜே. அனஸ்ரதாஸும், கௌரவ விருந்தினராக பழைய மாணவி திருமதி மேரி ஆன் எலிஸ்ரனும் கலந்து கொள்வர். (50- 38)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கோப்பாய் - கைதடிப் பாலப் புனரமைப்புக்கென உபகரணங்கள் வந்தும் பணிகள் ஆரம்பிக்கவில்லை

### இதனால் பொதுமக்கள் போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம்,செப். 24

கோப்பாய்- கைதடி வீதியில் உள்ள பாலம் புனரமைப்பதற்கு கொண்டுவரப்பட்ட உபகரணங்கள் கடந்த ஐந்து வருடங்களாக ஒரே இடத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

கைதடி, நாவற்குழி ஆகிய பாலங்கள் புதிதாக நிர்மாணிக்கும் போது கோப்பாய் - கைதடிப் பாலம் நிர்மாணிப்பதற்கும் உபகரணங்கள் கொண்டுவரப்பட்டன.

ஆனால் இதுவரை பாலவேலைகள் தொடங்கப்படாமல் பாலமருகே தற்காலிக பாதை அமைக்கப்பட்டு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் போக்குவரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்த தற்காலிகப் பாதை, மழை பெய்யும் காலங்களில் வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு சிதைவடைந்து விடுவதால் இந்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பாலம் அமைப்பதற்குரிய உபகரணங்கள் அவ்விடத்தில் உள்ளதால் மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பாலவேலையினை மேற்கொள்ள உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளமாட்டார்களா என மக்கள் அங்கலாய்க்கின்றனர். (1-207)

## பாஷையூரில் ஐஸ் தொழிற்சாலை அமைக்க சமூக சேவைகள் அமைச்சர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.24

யாழ். குடாநாட்டுக் கடற்றொழிலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க, குருநகர், பாஷையூரில் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

மேற்படி தொழிற்சாலை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் அமைச்சின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற சமயம், குடாநாட்டில் பிடிக்கப்படும் மீன்களைப் பதப்படுத்துவதன் மூலம் வெளிமாவட்டங்களுக்கு மீன்களைக் கொண்டு செல்லும் கடற்றொழிலாளர்கள் அதிக நன்மை யடைவார்கள் என அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

இதேவேளை ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையைக் குடாநாட்டில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என இச்சந்திப்பில் கலந்து கொண்ட கடற்றொழில் துறை அமைச்சின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளருக்குப் பணிப்புரை வழங்கிய அமைச்சர், இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார் என அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ்

## தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட மூன்று பாடசாலைகள் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், செப்.24

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின்கீழ் தீவகத்தில் மூன்று பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம், நயினாதீவு மகா வித்தியாலயம் போன்றவற்றில் புதிதாக வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்தில் விவசாய ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று தீவக வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (50- 224)

## நல்லூர் பிரதேச செயலக வாணி விழா வெள்ளியன்று

நல்லூர், செப்.24

நல்லூர் பிரதேச செயலக வாணி விழா 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10மணிக்கு நடைபெறும்.

வாணி விழாவின்போது 2008ஆம் ஆண்டு தேசிய இலக்கியப் போட்டிகளில் பிரதேச மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (50- 111)

## அத்துளு நீர் விநியோகத்திட்டத்தின் மூலம் கரவெட்டியில் 500 குடும்பங்களுக்குக் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், செப்.24

பருத்தித்துறை மாயக்கையில் இருந்து கரவெட்டிப் பிரதேச மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.இதுவரை 500 குடும்பங்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அத்துளு நீர் விநியோகத்தாங்கி ஊடாக இந்த குடிதண்ணீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆயிரம் குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தில் இதுவரை சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்களின் வீடுகளுக்கு நேரடியாகக் குழாய் மூலமாக குடிதண்ணீர் விநியோகம்மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான குழாய்கள், மீற்றர்கருவிகள் போன்றவை கொழும்பில் இருந்து வந்து சேர்ந்துள்ளன.

இப்பிரதேச மக்களுக்கு நீண்டகாலமாக இருந்து வந்த குடிதண்ணீர் பிரச்சினை தற்போது நீங்கியுள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்தனர். (50-224)

## இடம்பெயர்ந்த மக்களுக்கான இம்மாத உலர் உணவு விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.24

உலக உணவுத்திட்டத்தின் கீழ் 11.08.2006 இன் பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கான செப்ரெம்பர் மாதத்திற்கான உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரிசி, கோதுமைமா, பருப்பு, சீனி, மரக்கறிஎண்ணெய் போன்ற பொருள்கள் நிவாரணத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிவாரணத்திற்கென விநியோகிக்கப்படும் பொருள்களின் விவரம் வருமாறு.

| பொருள் விவரம் | 1 அங்கத்தவர் | 2 அங்கத்தவர் | 3 அங்கத்தவர் | 4 அங்கத்தவர் | 5 அங்கத்தவர் | 6 அங்கத்தவர் | 7 அங்கத்தவர் | 8 அங்கத்தவர் | 9 அங்கத்தவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி (கிலோ கிராம்) | 5.600 | 11.200 | 16.800 | 22.400 | 28.000 | 33.600 | 39.200 | 44.800 | 50.400 |
| கோதுமை மா (கிலோ கிராம்) | 5.600 | 11.200 | 16.800 | 22.400 | 28.000 | 33.600 | 39.200 | 44.800 | 50.400 |
| பருப்பு (கிலோ கிராம்) | 1.680 | 3.360 | 5.040 | 6.720 | 8.400 | 10.080 | 11.760 | 13.440 | 15.120 |
| சீனி (கிலோ கிராம்) | 0.560 | 1.120 | 1.630 | 2.240 | 2.800 | 3.360 | 3.920 | 4.480 | 5.040 |
| மரக்கறி எண்ணெய் (லீற்றர்) | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 | 3.360 | 3.920 | 4.480 | 5.040 |
| மொத்தம் | 14.000 | 28.000 | 42.000 | 56.000 | 70.000 | 84.000 | 98.000 | 112.000 | 126.000 |

## நவராத்திரி விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.24

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி சந்திரபுரம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழா கடந்த சனிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

நவராத்திரி விரத காலங்களில் தினமும் முற்பகல் 10 மணிக்கு அபிஷேகத்துடன் விசேட பூசையும், பிற்பகல் 4மணிக்கு நவராத்திரி பூசையும் இடம்பெறும்.


தினமும் வசந்த மண்டபப் பூசை முடிந்ததும் மேற்படி ஆலயத்தின் அறநெறிப் பாடசாலை மாணவர்களால் நவராத்திரி பற்றிய தொடர் சொற்பொழிவு ஆற்றப்பட்டு வருகின்றது. (204)

* * * *

சுழிபுரம், செப்.24

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழா கடந்த சனிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

நவராத்திரி காலங்களில் தினமும் மாலை 5 மணிக்கு விசேட பூசைகள் நடைபெற்று சகலகலாவல்லி மாலை, அபிராமியந்தாதி பாடல்களும் ஓதப்பட்டு வருகின்றது. (204- 28)



குடத்தனையில் அமைந்துள்ள மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் வைத்து பயனாளிகளுக்கு பயன்தரும் மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். நிர்வாக உத்தியோகத்தர் த. கணேசமூர்த்தி மங்கள விளக்கேற்றுவதையும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் க். தனிநாயகம், குடியேற்ற உத்தியோகத்தர் செ. செல்வவரதர் ஆகியோர் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்குவதையும் படங்களில் காணலாம். (236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்பு கூட்டுறவுநகர் அராலியில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பு.சிவலிங்கம் நிற்பதையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ம.சிவசுப்பிரமணியம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்: விக்ரோறி)*

# மரண அறிவித்தல்கள்

## குமாரசாமிக் குருக்கள் பரமேஸ்வரிஅம்மா



காரைநகர் சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமிக் குருக்கள் பரமேஸ்வரிஅம்மா 22.09.2009 செவ்வாய்க்கிழமை காரைநகரில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதஐயர் (மாப்பிள்ளை ஐயர்)- திருவேங்கடஅம்மா (மீனாம்பாள்) தம்பதியினரின் அன்பு மகளும் குமாரசாமிக் குருக்களின் அன்பு மனைவியும் ஈழத்துச் சிதம்பர பிரதமகுரு அமரர் கணபதீஸ்வரக்குருக்கள் தம்பதியினர், கார்த்திகேசு ஐயர் தம்பதியினர் ஆகியோரின் பேர்த்தியும், இரத்தினசபாபதிக் குருக்கள்- புவனேஸ்வரிஅம்மா தம்பதியினரின் மருமகளும், காண்டீபன், காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயும், உமாசுதக் குருக்களின் (முன்னாள் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்,கச்சேரி, யாழ்ப்பாணம்-நோர்வே ) அன்பு மாமியும், நாகராஜேஸ்வரன், இராஜலட்சுமி, கார்த்தியாயினி, ஈஸ்வரக்குருக்கள் (ஈழத்துச் சிதம்பர பிரதம குருக்கள், காரைநகர்), ஈஸ்வரி (சிங்கப்பூர்), காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஷ்ணஐயர் , காலஞ்சென்ற சேசாமணிஐயர் மற்றும் மகேஸ்வரசர்மா, மலர், பத்மலோசனி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நாகரத்தினஅம்மா, செல்லம் அம்மா (சிங்கப்பூர்), காலஞ்சென்றவர்களான மங்களஅம்மா, பூரணம்அம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், ஸ்ரீநிவாச ஐயரின் பெறாமகளும், ருக்குமணி (உமா)-ஸ்ரீஸ்கந்தராசக்குருக்கள் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற வெங்கடாசல ஐயர் (ரவி) மற்றும் குணஜானகி (தேவி) - சிவயோகீஸ்வரசர்மா (திருகோணமலை), புஸ்பஇராகவன் (இராகவன்), வாகீஸ்வரி - கண்ணன் (அவுஸ்திரேலியா), அசோகன்- வாணி (அவுஸ்திரேலியா), பால்ராஜ்சர்மா (பாலன்)-பாலபத்மினி (கொழும்பு), சிவ்காமி-தினேஸ்சர்மா (ராஜா -லண்டன்), புவனேஸ்வரி- அம்பிகைபாகன் (மட்டக்களப்பு), கல்யாணி- விக்கினேஸ்வரக் குருக்கள் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சிறியதாயும் காலஞ்சென்ற சயந்தஸ்ரீயின் அன்பு மாமியும், ஸ்ரீலட்சுமி, தனஸ்ரீ, ஆயுஸ்யா, ஸ்ரீவித்தியா, சங்கீதா, கரீந்திரன், பவீந்திரன், ஸ்ரீசுயானி, நிவாசன், நிகிதா, நிவேதன், ரவிதன்யா, கரிநிவேதா, அஜிதம்பியா, நவீனன், ஸ்ரீகரன், கெங்கேஸ்வரன், ராம்தயா, தசக்கரி, சனாதனன், சனந்தியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சரஸ்வதிஅம்மா, பாலாம்பிகை அம்மா, அமரர் சுப்பிரமணியக் குருக்கள் (அரியாலை) மற்றும் சகுந்தராஅம்மா, தங்கசாமிசர்மா, கணேசசர்மா, ஜெகதீஸ்வரிஅம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.09.2009) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் நடுத்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படுமென்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:

நடுத்தெரு, காரைநகர். பிள்ளைகளும் சகோதரர்களும். (89166)

## கணபதி தவசி (குஞ்சப்பா)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் மானிப்பாயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி தவசி 22.09.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி- நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற காமாட்சியின் அன்புக் கணவரும் புவனேஸ்வரி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, கோபாலசிங்கம், இரத்தினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரமூர்த்தி, காலஞ்சென்ற குமாரசாமி, கந்தசாமி, தங்கமலர், காலஞ்சென்ற செல்வராஜா ஆகியோரின் அன்பு மாமனும் ஜெயந்திரன், தர்மகுலேந்திரன், ஜெயந்தினி, சுகந்தினி, புவனேந்தினி, முரளிதரன், விஜிதா, றெஜிதா, கவிதா, ஜெனிதா, லோகேஸ்வரன், விக்னேஸ்வரன், வரதேஸ்வரன், விமலேஸ்வரன், சத்தியேஸ்வரன், யாமினி, சர்மினி, தனுபரன், சியோபரன், நீலாஜினி, ஜெகநீதன், தர்சினி, கஜநீதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஜோசுவா, திலக்ஷன், கோபிகா, தனுர்ஷிகா, டிக்ஸன், சோபிகன், சாருகா, தர்சிகாஜோய், சுனிக்கா, ஆர்த்திகா, யதுர்ஷிகா, அனோஜி, ஆருஜா, சுபர்ஷன், சுபர்ஷிகா, நிவேதிகா, டனிக்ஷனா, பிறேனுஜா, தர்மிகா, பிரீத்தி, பிரியந், றஜித், சஜிந், பிருந்திகா, ரோஜன், டெரிஷன், அபினுஜன், இலக்கியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான சின்னவர், முத்தர், கதிரவேலு, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

"முனீஸ்வரன் இல்லம்"
பட்டினசபை வீதி, மானிப்பாய்.

த.கோபாலசிங்கம் (மகன்).

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம் , செப்.24

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சண்டிலிப்பாய் பிரிவில் கணனிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கத்தின் சண்டிலிப்பாய்ப் பிரிவில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வதிவிடப் பிரதிநிதி ஏலினா பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக் கழக புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)


ஆரம்பமாகியுள்ளது!

**B.A**

வகுப்புகள்

பேராதனை

**BEACON**

யாழ்நகர்


### தவறிவிட்டது

மார்க்கண்டு கெங்கேஸ்வரன் என்பவரது தே.அ.அ (651774381V) யாழ்ப்பாணத்திற்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட முகவரியில் கொடுத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஆலடி, உடுவில்.

### காணி தேவை

சுன்னாகத்திற்கும் மருதனார்மடம் சந்திக்கும் இடைப்பட்ட பிரதான வீதியில் 2 பரப்பு வெற்றுக்காணி தேவை.

குறிப்பு: சுன்னாகம் நகரினை அண்டிய பகுதியில் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 0213002819**

### பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பெண்பிள்ளை தேவை.

**தொடர்பு: T.P - 021 222 3635** (89157)

### மணமகள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பம், 1976, முதலாம் பாதம், கன்னி ராசி, அத்த நட்சத்திரம், 8இல் செவ்வாய் உடைய கொழும்பில் கடை ஒன்றில் Managerஆகக் கடமையாற்றும் அழகிய, சிவந்த, பிறக்கும்போது வலக்கையில் அரைவாசி இல்லாத ஆனால் சகல வேலைகளும் செய்யும் துடியாட்டமுள்ள, யாழ்ப்பாணத்தில் சொந்த வீடு கொண்டுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. தகுந்த காரணத்துக்காக விவாகரத்துப் பெற்றவர்களும், கணவரை இழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். உள்நாடும், வெளிநாடும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொடர்புகளுக்கு: 0774127632, 0774472517**

### துர்க்கா திருமண சேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 1970, செவ்வாய்க் குற்றமற்ற, நட்சத்திரம் கார்த்திகை 2ஆம் பாதம் உடைய மணமகன் நோர்வேயில் இருந்து வந்திருக்கிறார். தகுதியானவர்கள் புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (89161)

### தாதி தேவை

தாதியாக வேலை செய்ய (மாநகர சபைக்குட்பட்ட) பெண்பிள்ளைகள் தேவை.

நடனமுருகன் வைத்திய நிலையம்,
சத்திரச்சந்தி,
யாழ்ப்பாணம். (89157)

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி மேற்கு, கரந்தன் சந்திக்கு அருகில் 6 பரப்புக்காணியுடன் கூடிய சகல வசதிகளும் உடைய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.பார்த்திபன்
0777238275 (89164)

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திரு.ப.உதயகுமார் அவர்களின் பாசமிகு தந்தை

## அமரர் வல்லிபுரம் பரமலிங்கம்

இறைபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம் (89163)

# கண்ணீர் அஞ்சலி



உதயன் பணிமனையில் Graphic Designer ஆகப் பணிபுரியும் இதயராஜா அவர்களின் அன்புத் தந்தை

## பொன்னுத்துரை யோகேஸ்வரராஜா

(முன்னாள் தொழில்நுட்ப [illegible])

இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

IDM, சாவகச்சேரி (சி/560994) நிர்வாகத்தினர்.

# ஈர விழிகளுடன் இதயம் நெகிழ்ந்த அஞ்சலி



இலங்கை வங்கி வட பிராந்திய அலுவலகத்தில் முகாமையாளராகக் கடமையாற்றிய

## அமரர் சிவசம்பு செந்தில்நாதனின்

திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் வங்கிச் சமூகத்திற்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி மானிப்பாய் மேற்தரக்கிளை,
சங்கானை விரிவாக்கற்கிளை. (89159)

முகாமையாளரும் ஊழியர்களும்.

# மரண அறிவித்தல்

## இரவி பிரசாத்

ரயில் நிலைய வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரவி பிரசாத் 19.09.2009 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் இரவி (தொழில்நுட்பமேற்பார்வையாளர், சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம், யாழ்ப்பாணம்)- இரஞ்சினி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், பிரவீனா (குடும்பநல உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்திய சாலை), பிரபாகினி (உத்தியோகத்தர், இலங்கை வங்கி, கொடிகாமம்) ஆகியோரின் சகோதரனும் பிரதீபனின் (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) மைத்துனரும் சரவண முத்துவின் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர், சமாதான நீதிவான், மாவட்ட தலைவர், லயன்ஸ் கழகம் 306 B1) பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரயில் நிலைய வீதி,
கொடிகாமம். (89160)

தகவல்:
இ.இரவி (தந்தை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு

உதயனில் வாரந்தோறும் வெளிவரும் 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதைப் படங்களில் காண லாம்.



இ.அருண்பிரசாத் பரிசு பெறுகின்றபோது...



சற்குணம் கயல்விழி பரிசு பெறுகின்றபோது...



உதயணன் கௌதமன் பரிசு பெறுகின்றபோது...



ச.ஜனந்தினி பரிசு பெறுகின்றபோது...

## பொறுமையின் அவசியம்

மனிதனுக்கு வாழ்வில் உயர்வை வழங்குவது அவன் கடைப்பிடிக்கும் பொறுமையே ஆகும். மனிதன் ஒருவன் தனது வாழ்க்கையில் மிளிர வேண்டுமெனில் அவசியம் பொறுமையினைக் கடைப்பிடிக்க வேண்டும். மனிதனது வாழ்க்கை சிக்கல்கள் பலவும் நிறைந்தது. மனிதன் ஒருவன் வாழ்விலே பல வகையான இன்னல்களையும் இடர்களையும் சந்திக்க நேர்கின்றது. அவன் இன்னல்களில் இருந்து விடுபடுவதானது மிகவும் கடினமானதாகும். மனிதன் இவ்வாறான இக்கட்டான கட்டங்களில் பொறுமையினைக் கடைப்பிடிப்பதே இவற்றிலிருந்து விடுபட அவனுக்குள்ள வழியாகும்.

மனிதனது வாழ்க்கையில் அன்றாடம் ஏற்படும் விரக்தி, ஏமாற்றம், ஏக்கம் போன்ற யாவற்றில் இருந்தும் அவனைக் காப்பாற்றி நேரே வழிநடத்திச் செல்வது அவன் கடைப்பிடிக்கும் பொறுமையே ஆகும். மனித வாழ்வின் முக்கியமான அடிப்படைகளுள் ஒன்று பொறுமை ஆகும். மனிதனொருவன் பொறுமையினை தனக்கு வழிகாட்டியாகக் கைக்கொண்டால் அவனது வாழ்க்கை சிறப்பாக அமையும். இல்லையேல் இவன் வாழ்க்கையில் தோலிவியுற்றவன் ஆகிவிடுகின்றான்.

பொறுமை என்பது சகல சந்தர்ப்பங்களிலும் எல்லாவிதமான கஷ்டங்கள், துன்பங்கள், இழப்புகள் என்பவற்றை முடியுமானவரை சகித்துக் கொள்வதும் உரிய காலம் வரும்வரை சகலவற்றிற்கும் காத்திருத்தலே ஆகும். மனிதன் சகித்து கொள்வது என்பது மிகவும் கடினமான ஒன்றுதான். மனிதனானவன் எச்சந்தர்ப்ப சூழ்நிலையிலும் பொறுமையினை இழந்து விடுதல் கூடாது. பொறுமையே வெற்றியின் முதல் அடி. இதனைத்தான் நம் முன்னோர் ''பொறுத்தார் பூமி ஆள்வார். பொங்கினார் காடாள்வார்'' என்று கூறியுள்ளனர். இக் கூற்றின் மூலம் இன்னொரு உண்மையும் புலப்படுகின்றது. அதாவது பொறுமையில்லாதவர் எப்போதும் தோல்வியையே சந்தித்து அனைத்தையும் இழந்து விடுவார் என்பதாகும். உண்மையில் நாம் பொறுமையினைக் கடைப்பிப்பது மிகவும் குறைவு. இது தான் மனித இயல்பாகவும் உள்ளது. எனினும் இயலுமானவரை நாம் முயன்றிடல் வேண்டும். இளமைக்காலம் முதலே நாம் பொறுமையினைக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பொறுமையுடன் இருக்கும் ஒருவனே வாழ்வில் வெற்றியைப் பெறலாம். இன்பத்தினை அனுபவிக்கலாம். நாம் பொறுமையைக் கடைப்பிடிப்பதே நமக்கு வெற்றியையும் உயர்வையும் வழங்கும்.

க. மயூரன், 2009 கலைப்பிரிவு,
மாதகல் சென்யோசப் ம.வி.

## சிந்தனைக்கு



- ★ நல்ல நாள் - இன்று
- ★ நல்ல வெகுமதி - மன்னிப்பு
- ★ இருக்க வேண்டியது - மானம்
- ★ இருக்கக் கூடாதது - ஆணவம்
- ★ தேவைக்கேற்றது - சாமர்த்தியம்
- ★ தேவையற்றது - விவாதம்
- ★ எதிலும் சுலபமானது - குற்றம் காணல்
- ★ எதிலும் கடினமானது - பிழையின்றி வாழ்தல்
- ★ மேற்தரமானது - நட்பு
- ★ கீழ்த்தரமானது - துரோகம்
- ★ செய்யவேண்டியது - உதவி
- ★ செய்யக்கூடாதது - உபத்திரவம்
- ★ அறிய வேண்டியது - உலக செயல்
- ★ அறியக் கூடாதது -அடுத்தவன் செயல்
- ★ அடங்க நினைப்பது - தாய், தந்தைக்கு
- ★ அடக்க நினைப்பது - உனது மனதை
- ★ நம்பக் கூடியது - மனச்சாட்சியை
- ★ நம்பக்கூடாதது - வதந்தி
- ★ பார்க்கக் கூடியது -பகுத்தறிவு

ச.பனந்தினி,
கொக்குவில்
இந்துக் கல்லூரி.

## தியாகம்

நான்கு எழுத்திலான முத்து - இது
இதயத்தில் ஊறிடும் சொத்து
காதலர் செய்திடும் தியாகம் - அது
நினைவில் நிற்கும் ஆயுள் முழுதும்
நீ தியாகம் செய்ததுண்டா மற்றவருக்காக
உன் சந்தோசத்தை விட்டுக் கொடுத்து
நீ தியாகம் செய்து பார்- உனக்கு
அதில் கிடைக்கும் ஒரு சந்தோசம்
புகழைத் தந்திடும் தியாகம்
சாந்தியை தந்திடும் தியாகம்
ஒரு சிறிய தியாகம் செய்
அப்போது தெரியும் தியாகத்தின் வலிமை!

கு.சுகன்யா,
திருநெல்வேலி.

## விண்வெளியில் சில நொடி நேரம்....

01. வெறுங்கண்களால் பார்க்கக் கூடிய கோள்கள் எவை? புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி
02. விண்வெளிக்கு அனுப்பிய மிகவும் பாரமான விண்கலம் எது? அப்பலோ
03. விண்வெளியில் முதலில் உயிர் நீத்த விண்வெளி வீரர் யார்? சோவியத் நாட்டைச்சேர்ந்த விளாடிமீர் கோமசோடா
04. விண்வெளிக்கு முதலில் ஏவப்பட்ட விண் ஆய்வு கூடம் எது? சல்யூட்-1
05. உலகிலேயே மிகப் பெரிய கோள் மண்டலம் எங்கு உள்ளது? மொஸ்கோவில்
06. பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திரக்கூட்டம்? அன்டோமீடா நட்சத்திரக் கூட்டம்.
07. விண்வெளியில் நீண்ட நேரம் மிதந்தவர் யார்? பஜ் ஆல் பிரிஸ் என்னும் அமெரிக்கர்.
08. மிதக்கும் விண்வெளிக் கூடத்தை முதலில் அமைத்தவர் யார்? ரஷ்யர்கள், சல்யூட் ஆய்வு கூடத்தில்
09. செவ்வாய்க் கிரகத்தில் இறங்கிய முதல் விண்கலம் எது? வைகிங் விண்கலம்.
10. சந்திரனை அடைந்த முதல் ஆய்வுச் செயற்கைக்கோள் எது? லூனிக்-11
11. வோல்கா என்னும் வால் வெள்ளியைக் கண்டுபிடித்தவர் யார்? எட்மண்ட் ஹேலல்
12. யுரேனஸ் கோளைக் கண்டுபிடித்தவர் யார்? சேர் வில்லியம் ஹர்சஸ் என்பவர் 1781 இல்.

ச. டிலானி,
கலைப்பிரிவு,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

## இளவல்கள் வட்டம்

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.................. ..................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## கேள்விக்கு என்ன பதில்? -39இன் சரியான விடை

பிறேசிலிலுள்ள யேசுநாதர் சிலை

குறிப்பு: கேள்விக்கு என்ன பதில்? 39 இற்கான சரியான விடை எவராலும் அனுப்பப்படவில்லை.

## கேள்விக்கு என்ன பதில்? -41

தமிழ்நாடு வான்புகழ் கொண்டமைக்கு மகாகவி பாரதியார் கூறும் காரணம் என்ன?

(சரியான விடையை 01.10.2009 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

## இந்த வாரம்

### செப்ரெம்பர் 18



இங்கிலாந்தில் பிரபலம் பெற்ற மின்னொளியிலான அலங்கார நிகழ்வு 1879ஆம் ஆண்டு செப்ரெம்பர் 18ஆம் திகதி 'பிளாக்பூல்' என்ற இடத்தில் முதன் முதலாக நடைபெற்றது.

### செப்ரெம்பர் 19

கரீபியன் தீவுக் கூட்டங்களைச் சேர்ந்த சென்.கீற்ஸ், நேவிஸ் ஆகியன 1983 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றன.



### செப்ரெம்பர் 20



1961 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20 ஆம் திகதி, ஆர் ஜென்ரீனாவைச் சேர்ந்த 'அன்ரோனியோ அபேர்ட்ரொன்டோ' என்பவர் ஆங்கிலக் கால்வாயை முதன் முதலாக - இடைவெளிவிடாது 43 மணித்தியாலங்கள் 5 நிமி[illegible]

### செப்ரெம்பர் 21

கொன்டூரஸ் நாட்டில் 1974ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதி வீசிய சூறாவளியில் சிக்கி எண்ணாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பலியாகினர்.



### செப்ரெம்பர் 22



தன்னை ஒரு சுதந்திர நாடாக 'ஆர்மேனியா' 1991 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22ஆம் திகதி பிரகடனப் படுத்தியது.

### செப்ரெம்பர் 23

சிலி நாட்டைச் சேர்ந்த, பிரபலமான கவிஞரான 'பப்லோ நெருடா' என்பவர் 1973ஆம் ஆண்டு செப்ரெம்பர் 23ஆம் திகதி மரணமடைந்தார்.



### செப்ரெம்பர் 24




'சினிமாஸ்கோப்' என்ற தொழிநுட்பத்தைப்பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட 'தறோப்' (THE ROBE) என்ற திரைப்படம் 1953 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 24ஆம் திகதி வெளியாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரிய வாண்மை நிறுவனத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பாடநெறியைப் பின்பற்றும் ஆசிரியர்களுக்கான கோலம் போடுதல், மாலைகட்டுதல் போட்டிகள் இடம்பெற்றன.

போட்டிகளில் கலந்துகொண்ட ஆசிரியையும் நிறுவனப் பணிப்பாளர் பா.தனபாலன், யாழ்.கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் க.இ.கமலநாதன் ஆகியோரைப் படங்களில் காணலாம். (1-28)

# இலங்கை அரசை விமர்சிக்கும் அனைவருக்கும் இதுதான் கதி!

## திஸநாயகம் விடயத்தை சாடுகிறது 'தினமணி'

கொழும்பு, செப்.24

இலங்கையில் 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் திஸநாயகம் மீதான தண்டனை தொடர்பாக தமிழகத்திலிருந்து வெளியாகும் 'தினமணி' பத்திரிகை செவ்வாய்க்கிழமை தனது ஆசிரியர் தலையங்கத்தில் கடுமையாகச் சாடியுள்ளது.

அந்த ஆசிரியர் தலையங்கம் வருமாறு:-

இலங்கைப் பத்திரிகையாளர் ஜெயபிரகாஷ் சிற்றம்பலம் திஸநாயகம் என்பவருக்கு இலங்கை உயர் நீதிமன்றத்தில் 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதற்கு, ஆசிய மனித உரிமைக் கழகம் கண்டனம் தெரிவித்தது. உலகப் பத்திரிகை தினத்தன்று பேசிய அமெரிக்க அதிபர் ஒபாமா, இந்த இலங்கைத் தமிழரின் பெயரையும் குறிப்பிட்டு, உலகம் முழுவதும் பத்திரிகைகளின் வாய்மூட நடத்தப்படும் அத்துமீறல்கள் குறித்துப் பேசினார். இந்தியாவில் சில பத்திரிகைகள் தலையங்கம் எழுதின. அத்தோடு முடிந்துபோனது.

அவர் செய்த குற்றம் என்ன? இலங்கை அரசைக் கண்டித்து 'நோர்த் ஈஸ்டர்ன் ஹெரால்ட்' என்ற ஆங்கில இதழில் கட்டுரை எழுதியதுதான் மிகப் பெரிய குற்றம். இதற்காக 2008 மார்ச் மாதம் கைது செய்யப்பட்டு தற்போது தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 20ஆண்டுகளுக்குத் தண்டிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் அவர் மீது இன்னொரு குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டது. இலங்கை அரசு 2006 ஆம் ஆண்டு கொண்டுவந்த நெருக்கடி கால ஒழுக்காற்றுச் சட்டத்தை மீறி நடந்துகொண்டதுடன் தீவிரவாத அமைப்புகளுக்குத் தனது பத்திரிகை மூலமாக ஆதரித்து நிதியுதவி திரட்டியும் தந்தார் என்பதுதான் இந்தக் குற்றச்சாட்டு.

அவர்கள் தீவிரவாத அமைப்பு என்று குறிப்பிடுவது விடுதலைப் புலிகளைத்தான். ஆனால் விடுதலைப்புலிகளுக்கு ஒரு பத்திரிகை மூலம் நிதி திரட்டும் அவசியம் இருந்ததேயில்லை என்பதை உலகம் அறியும். இலங்கை அரசும் அறிந்ததுதான். இருந்தும் ஏன் இந்த இட்டுக்கட்டுதல்.

ஆசிய மனித உரிமைக் கழகம் தெரிவித்துள்ள கருத்தை எண்ணிப்பார்த்தால், அது மிகச்சரியானது என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். அந்த அமைப்பு தெரிவித்துள்ள கருத்து இதுதான்.

''இந்தத் தீர்ப்பு எங்களுக்கு ஆச்சரியம் தரவில்லை. அவர் கைது செய்யப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்ட நாள் முதலாகவே நாங்கள் இதனை அரசியல் உள்நோக்கம் கொண்ட வழக்கு என்று சொல்லி வருகிறோம். திஸநாயகம் எழுதிய கட்டுரையோ அவர் மீது சுமத்தப்பட்ட குற்றமோ இலங்கை அரசுக்கு ஒரு பொருட்டே அல்ல. ஆனால், இலங்கை அரசு இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, இதேகதிதான் உங்களுக்கும் என்று இலங்கையில் விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டுவிட்டோம் என்று சொல்லும் புதிய சூழ்நிலையில், அங்கு உள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் சமிஞ்ஞை தந்துள்ளது. அதுதான் இந்த வழக்கு மற்றும் தண்டனையின் முக்கிய நோக்கம்.''

இதுதான் உண்மை. இலங்கையில் உள்ள எல்லாப் பத்திரிகைகளும் அரசின் அடிவருடிகள் அல்ல. சிங்களவர்கள் நடத்துகிற பத்திரிகைகளும் சிங்களப் பத்திரிகையாளர்களும் இலங்கைத் தமிழர்கள் மீதான அத்துமீறல்கள் குறித்து எழுதி வருகின்றனர். அவர்களும் கூட அச்சத்தில் வாய்மூடிக் கிடக்கவேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர, வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதுதான் இந்த வழக்கு மற்றும் தீர்ப்புச் சொல்லும் செய்தி.

இலங்கைத் தமிழர்கள் அடைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் செல்வதற்கும் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன அல்லது சாதகமாகச் சொல்லக்கூடியவர்கள் மட்டுமே அனுப்பப்படுகிறார்கள். இலங்கைத் தமிழ்ப் பத்திரிகையாளர்களும் 'தட்டிக் கேட்கிற தலைவன் இல்லாத வீட்டில் பதறிக்கிடக்கும் பிள்ளைகளாக இருக்கிறார்கள்.'' அங்கே நடக்கும் பிரச்சினைகளை வெளியுலகுக்குக் கொண்டுவரக் கூடிய வாய்ப்பு உள்ளவை சிங்கள ஊடகங்கள் மட்டுமே. இனி அவர்களும் இலங்கைத் தமிழர் விடயத்தில் அடக்கி வாசிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை இலங்கை அரசு ஏற்படுத்தியுள்ளது.

ஒரு பத்திரிகையாளர் என்பவர் எழுத்துப் போராளி. அவரத் ஆயுதமே எழுத்துத்தான். ''ஒரு கருத்தை என்மனம் ஏற்றது என்றால் அதை எடுத்துரைப்பேன்; எதிர்த்து எவர் வரினும் அஞ்சேன்'' என்பதுதான் ஒரு பத்திரிகையாளரின் அறம். அதைச் செய்யத் தவறிய பத்திரிகையாளர் சமூகத்தில் தார்மீகக் குற்றவாளி.

ஆனால், இலங்கையில் தன் எழுத்துக் கடமையைச் செய்த ஒரு பத்திரிகையாளருக்கு இவ்வளவு பெரிய தண்டனை அநியாயமானது. ஆனால், தமிழகத்தில் இந்த இலங்கைத் தமிழனுக்காக அட!ஒரு சக பத்திரிகையாளருக்காக, எந்தவொரு பெருங்குரலும் எழவில்லை. இந்தத் தீர்ப்பைக் கண்டிக்கவில்லை. இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ பொதுமன்னிப்பு வழங்க முடியும். அவரை விடுவிக்க முடியும். இங்குள்ள ஊடகர்கள் அவரை விடுவிக்க வேண்டும் என்று கோரவில்லை. பாவம் அவர். தாயகம் இல்லாப் பிள்ளை தாயில்லாப் பிள்ளைதானே!

இது அந்த நாட்டு விவகாரம் என்று சொல்வது கேட்கிறது. ஆனாலும், ஒரு சிறு அச்சம். இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஆதரித்தும், ராஜபக்ஷவைக் கடுமையாக எதிர்த்தும் எழுதுகிற தமிழர் பத்திரிகையாளர்களைத் தங்கள் நாட்டுத் தீவிரவாதிகளுக்கு உடந்தை என்று இலங்கை அரசு வழக்குப் பதிவு செய்து, சர்வதேசக் குற்றவாளியைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இந்திய அரசிடம் கேட்கத் துணிந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இந்தக் கற்பனை 'ரொம்ப ஓவர்' என்று சொல்லலாம். ஆனாலும், 'யானை உறங்கி னால் பூனைகளும் ஏறி விளையாடும் கரும்பாறையென்றே!' (சி)

## யாழ்.மாநகர சபை சிறாருக்கு நவீன வசதி கொண்ட முன்பள்ளி

நல்லூர், செப். 24

யாழ்.மாநகரசபை முன்பள்ளிச் சிறார்களுக்காக நவீன வசதிகள் கொண்ட முன்பள்ளி அமைக்கப்படவுள்ளது.

இலங்கைக்கான சிறுவர் அபிவிருத்தி நிறுவனம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இது நவீன வசதிகள் கொண்ட இலங்கையின் 32 ஆவது முன்பள்ளியாக அமைகிறது என யாழ்.மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார். இந்த முன்பள்ளி அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (203-111)

# புலிகளின் தோல்வியிலிருந்து நாம் பாடம் கற்போம்: மாவோயிஸ்டுகளின் ஆவணம் இந்தியாவால் கைப்பற்றல்

சென்னை, செப். 24

இந்திய மாவோயிஸ்ட் கிளர்ச்சி இயக்கத்தின் யுக்திகள் குறித்த தகவல்களைக் கொண்ட கசிந்த ஆவணம் ஒன்றை இந்திய அரசு கைப்பற்றியுள்ளது எனச் செய்திகள் கூறுகின்றன.

மாவோயிஸ்ட்டுகளின் அதியுயர் நிர்வாக பீடமான பொலிற்பீரோ இதனை வடிவமைத்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

இந்தியப் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான யுக்திமிக்க இராணுவ நடவடிக்கைகளை திட்டமிட்டு, நடைமுறைப்படுத்துமாறு தமது போராளிகளுக்கு அழைப்பு விடுக்கும் மாவோயிஸ்டுகளின் இந்த 20 பக்க ஆவணம், தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை நிர்மூலம் செய்வதற்கு மன்மோகன் சிங் அரசு தயாராகி வருகிறது எனக் கூறுகிறது.

ஏகாதிபத்திய அமெரிக்காவுடன் தொடர்பு வைத்திருந்தது என இந்தியாவை குற்றஞ்சாட்டுவதுடன், மாவோயிஸ்ட் டுகள் இந்திய அரசின் சின்னங்கள் மற்றும் குறியீடுகள் மீது கடுமையான தாக்குதலை நடத்தி, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுமாறும் அந்த ஆவணம் கோருகிறது.

தமது அமைப்பின் போராளிகள் மெத்தனமாக இருந்து விடக்கூடாது என்று கூறுகின்ற மாவோயிஸ்டுகளின் அரசியல், இந்தியாவுக்கு, அமெரிக்காவிட்ம் இருந்து உதவிகள் கிடைக்கின்றன எனவும், விடுதலைப் புலிகளின் தோல்வியில் இருந்து தாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இராணுவங்களின் யுக்திகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் எவ்வாறு அவற்றின் வீழ்ச்சிக்கு வழி செய்கிறதுஎன்பது குறித்து விடுதலைப் புலிகளின் தோல்வியில் இருந்து புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அந்த ஆவணம் கூறுகின்றது. (சி)

## வட.இ.ச.சபைப் பரீட்சைகள் -2010

வட.இ.ச.சபையின் 2010 ஆம் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் 28.09.2009 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவு திகதி 23.11.2009 விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா (முப்பது) 30/= மட்டும்.

விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் பெறவிரும்புவோர் ரூபா 45/= பெறுமதியான காசுக்கட்டளையுடன் (மணிஓடர்) சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்
வட இலங்கை சங்கீத சபை
யாழ்-வலயக்கல்வி அலுவலகம்,
செம்மணி வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(இ/581077)

## மாத்தறை, மட்டக்களப்பில் விபத்து; 6 பேர் காயம்

கொழும்பு, செப். 24

மட்டக்களப்பிலிருந்து செவ்வாய்க்கிழமை கொழும்பு நோக்கி வந்த ரயில் ஒன்றுடன் வான் ஒன்று மோதியதால் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து காலை 8 மணியளவில் இடம்பெற்றதாக பொலன்னறுவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த நால்வரும் தற்போது பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (சி)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 ★ 12 ★ 1939

மறைவு 15 ★ 10 ★ 1999



அமரர் ஆறுமுகம் கமலநாதன்

B.A.,Dip. in Edu., S.L.P.S.GRADE-I,

முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர்,(AD- ENGLISH) வலிகாம வலயம்

திதி: பூர்வபக்ஷ சஷ்டி(24.09.2009)

கண்ணிமைப் பொழுதெல்லாம் கண்ணெதிரே நிறைந்தவரே
கதிகலங்க வைத்துவிட காலனும் துணிந்தானோ!
பத்துவருடங்கள் சுழன்று ஓடினாலும் சுகம்கேட்க எம்முன் ஒருமுறை வாருமையா
மறைந்தாலும் மறையாத சூரியனைப்போல் - எம்மனதில்
என்றும் சுடர்வீசி நித்திலமாய் இருப்பீரையா!
உங்கள் ஆத்மா எல்லாம்வல்ல காளிஅம்பாளின் பாதார விந்தங்களில் சமர்ப்பணம்.

தகவல்:
திருமதி சர்வேஸ்வரலலிதா கமலநாதன்,
ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுடன்:
அன்பு மனைவி, அக்கா, அத்தான்,
மச்சான் மச்சாள்மார், சகலன்மார்,
பேரமக்கள், மருமக்கள்.

(89083)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கீதவாகினி இசைக் கல்லூரியின் நூல் வெளியீட்டு விழாவில் மாணவி ஆ.பிரவீனா, கீதவாகினி இசைக் கல்லூரி அதிபர் கிருஷ்ணவேணி ஆகியோர் உரையாற்றுவதையும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.மாணிக்கம் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மாணவி ஒருவருக்குக் கேடயம் வழங்குவதையும் அரியாலைஅபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதனிடம் புல்லாங்குழல் இசை நூலின் முதல் பிரதியை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை

## ஊடகத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் விசனம்

கொழும்பு, செப். 24

ஊடகவியலாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு அரசு தவறியுள்ளது - என்று இலங்கை ஊடகத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தர்மசிறி லங்கா பேலி தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் தகவல்களைத் தெரிந்துகொள்ளும் உரிமையைப் பாதுகாக்குமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

தமக்குக் கிடைக்கும் தகவல்களை மக்களுக்குத் தெரியப்படுத்துவதில் ஊடகவியலாளர்களுக்கு இருக்கும் தடைகள் அகற்றப்பட வேண்டும் என்றும், இவர்கள் மீதான கொடூரத் தாக்குதல்களும், ஊடக அடக்குமுறையும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அரசிடம் எட்டு ஊடக நிறுவனங்கள் சார்பாக வேண்டுகோள் விடுக்கப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை இதழியல் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -அரசு, இதுவரையில் செயலற்றுக் கைவிடப்பட்ட நிலையில் இருந்த பத்திரிகைப் பேரவையை மீண்டும் இயங்கு நிலைக்குக் கொண்டுவர முயற்சி மேற்கொண்டுள்ளது. 35 வருடங்களுக்கு முன் இலங்கையிலுள்ள அச்சு ஊடகங்களுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த அன்றேல் அச்சு ஊடகங்களை நிர்வகிப்பதற்காக - அடக்கியாள்வதற்காகவே இந்த விதிமுறைகள் கொண்டுவரப் பட்டிருந்தன.

இவற்றை எவ்வித மாற்றங்களுமின்றி, இன்றைய நிலைக்கு இவை பொருத்தமானவைதானா என ஊடகச் சங்கங்களுடனோ ஊடகவியலாளர்களுடனோ ஆராய்ந்து பார்க்காமலும், எவருடனும் எவ்வித பேச்சுகளை நடத்தாமலும் மீண்டும் இயங்கு நிலைக்கு அரசு கொண்டுவந்துள்ளது.

பத்திரிகைப் பேரவையை மீண்டும் இயக்க முயற்சிப்பதற்கு நாம், ஊடக அமைப்புகள் என்ற வகையில் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இதன்மூலமாக அரசு தொடர்ச்சியாக இந்த நாட்டிலுள்ள மக்கள், தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமைக்குப் பங்கத்தை ஏற்படுத்தவே அரசு முயற்சிக்கின்றது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களைக் கொன்றவர்கள் யார் என்பதை அறிந்து கொள்வதற்குக் கூட அரசு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

தமக்குக் கிடைக்கும் தகவல்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியது ஊடகவியலாளர்களின் கடமை. எனவே அக்கடமையைச் செய்ய ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் தடைகளை அகற்றுமாறும், கொடூரத் தாக்குதல்களையும் ஊடக அடக்குமுறையையும் உடனடியாக நிறுத்துமாறும் நாம் கோருகின்றோம் - என்றார். (சி)

# தீவகத்தைச் சேர்ந்த 500 பேர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்

யாழ்ப்பாணம், செப்.24

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா முகாமிலிருப்பவர்களில் தீவகத்தைச் சேர்ந்த சுமார் 500 பேர் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்படவுள்ளதாக யாழ்.அரச அதிபர் க. கணேஷ் தெரிவித்தார்.

இவர்களை ஏற்றிவருவதற்கென யாழ்ப்பாணத்திலிருந்து வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அழைத்துவரப்படுபவர்கள் தீவகப் பிரதேச செயலர் பிரிவில் பொது இடங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த பின்னர் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர் என்றும் மேலும் அவர் தெரிவித்தார். (1-7)

# இலங்கையில் மனித உரிமை மீறல்களைத் தடுக்க அமெரிக்கா உறுதியாகக் குரல் கொடுத்தது

## ஐ.நா.பிரதிநிதி சுசன் ரைஸ் சொல்கிறார்

வாஷிங்டன், செப். 24

இலங்கையில் மோதல்கள் மிகத் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்காக அமெரிக்கா உறுதியாகக் குரல் கொடுத்தது - என்று அந்நாட்டின் ஐ. நாவிற்கான தூதுவர் சுசன் ரைஸ் தெரிவித்தார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களைத் தடுப்பது குறித்த தனது வாக்குறுதிகளைச் செயலில் காட்டவில்லை என்ற குற்றச்சாட்டுகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு:

இலங்கையில் யுத்தம் தீவிரமாக இடம்பெற்ற காலப்பகுதியில் மனித உரிமைகள் பாது காக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து நாங்கள் மிகவும் உறுதியாகக் குரல் கொடுத்தோம்.

இலங்கையில் அவ்வேளை எமது மிகத் திறமையான தூதுவர் பணியாற்றினார். அவர் அமெரிக்காவின் கரிசனைகளை அப்போது தெரிவித்தார். அதேவேளை, உதவி வெளிவிவகார அமைச்சர் நிலைமைகளை மதிப்பிட அங்கு சென்றார்.

வெளிவிவகார அமைச்சர் தனிப்பட்ட முறையில் இந்த விடயத்தில் கவனம் செலுத்தினார். இந்த விடயத்தில் அமெரிக்கா மிகத் தெளிவாக, தொடர்ச்சியாக கொள்கை ரீதியான நிலைப்பாட்டை எடுத்திருந்தது - என்றார் சுசன் ரைஸ். (அ-சி)

# இறைவனைக் கடந்து எதுவும் நடப்பதில்லை

அனைத்தும் இறைவனின் திருவருளால் நடைபெறுகின்றது. அதைக்கடந்து எதுவும் நடப்பதில்லை. எது நடந்தாலும் அது இறைவனின் கட்டளை. அது இறைவனின் சங்கற்பம். இறைவன் நிர்ணயித்ததே, நடப்பதனைத்தும் இறைவனின் கட்டளையால் நடைபெறுகிறது என்பது தெரிந்தால், வாழ்க்கையில் நடப்பது அனைத்தையும் நாம் எதிரிட்டு நிற்க இயலும்.

இந்த முறையில் நமது வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். வாழ்க்கையில் சவால்களை எதிர்த்துச் சமாளிக்க வேண்டும். வாழ்க்கையின் துன்பங்களைக் கண்டு நாம் பயப்படலாகாது. சஞ்சலம் அடையலாகாது. தைரியத்துடன் வாழ்க்கையின் துன்பங்களை எதிர்கொண்டால், நாம் தெய்வத்துவத்தை அடைகின்றோம்.

சந்தேகத்துக்கு இடங்கொடாதீர்கள். சந்தேகம் வந்தால் மனக்குழப்பம் ஏற்படுகின்றது. குழப்பம் ஏற்பட்டதும் இதயத்தின் Fuse பழுதடைகிறது. குழப்பத்துக்கு இடங்கொடாதீர்கள். சத்யத்தை அறியாத போது, சந்தேகங்கள் வருகின்றன. உண்மை புரிந்த பின்னர் சந்தேகமென்பது இல்லை. இவர்தான் அனில்குமார் என்று தெரிந்தபின் சந்தேகத்துக்கு இடமேது. அனில்குமார் யாரென்று தெரியாதபோது, இவர் அனில்குமாரா அல்லது வேறு ஒருவரா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. இத்தகைய சந்தேகங்களுக்கிடையில், உண்மையான அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ள முடிவதில்லை.



சுவாமி சிந்தனை

# நிதி வழங்குவதற்கு இலங்கைக்கு நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை

## சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

இலங்கைக்கு நிதி வழங்குவதற்காக இரகசிய நிபந்தனைகள் எதனையும் விதிக்கவில்லை எனத் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி இவ்வருடம் 3.5 வீதமாகவே காணப்படும் எனத் தெரிவித்துள்ளது.


கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள், மேலும் இதுபற்றிக் கூறியவை வருமாறு -

இலங்கைக்கு நிதி வழங்குவதில் எவ்வித நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை.

2009இல் இலங்கைளின் பொருளாதார வளர்ச்சி 3.0 வீதம் முதல் 3.5 வீதமாக அமையும். அடுத்த கட்டமாகக் கடனுதவியாக 3 கோடி 20 லட்சம் டொலர்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வோம்.

வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையை 7 வீதமாகக் குறைப்பதே இலங்கை அரசுக்கு கடும் சவாலாக அமையும் - என்றனர்.

சர்வதேச நாணயநிதியம் இலங்கையில் நிரந்தர அலுவலகம் ஒன்றை அமைக்கவுள்ளது என்றும் அவர்கள் கூறினர். (அ-சி)



இலங்கை வங்கியின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவையும் அச்சுவேலி இலங்கை வங்கியின் எழுச்சிக் கிராமமான புத்தூர் மேற்கு கலைமதி எழுச்சிக் கிராமத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவையும் முன்னிட்டும் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு கலைமதி மக்கள் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.சிவசங்கர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் இரத்ததானம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். கலைமதி சனசமூக நிலையத்தின் தலைவர் எஸ்.ரஞ்சித்குமார், இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளை முகாமையாளர் த.புவனேந்திரன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படங்கள் அச்சுவேலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியாளர் நிலையத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து மாணவர்களுக்கான வங்கிக் கற்கை நெறிகள் தொடர்பான விளக்கங்களை வழங்கினார்கள். யாழ்.இந்துக் கல்லூரிக்குச் சென்ற இக் குழுவினர் உயர்தர மாணவர்களுக்கு கருத்துரை வழங்கிய போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் இலங்கை வங்கி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் அபயரட்ண, வங்கியின் பரீட்சைப் பணிப்பாளர் சி.ஜே.பெர்ணான்டோ, வங்கியின் கல்விப் பணிப்பாளர் திருமதி விருதுசில்வா மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், க.சிவசுப்பிரமணியம் ஆகியோர் கூட்டாக இணைந்து கருத்துரை வழங்குவதையும்- நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: ஓங்காரன்)

## பழ மரக்கன்றுகள் விநியோகம்

கமநெகும திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகம் விவசாய திணைக்களத்துடன் இணைந்து பழமரக்கன்றுகளைப் பயனாளிகளுக்கு வழங்கியது.

நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் கன்றுகள் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் 250 பயனாளிகள் பழமரக் கன்றுகளைப் பெற்றுக்கொண்டனர். இவர்களில் 125 பேருக்கு பப்பாக்கன்றுகள்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோருக்கு ஜம்பு, கொய்யா, பலா என்பன வழங்கப்பட்டதாகவும் நல்லூர் விவசாய போதனாசிரியர் ச. சிவநேசன் தெரிவித்தார். நல்லூர் உதவி பிரதேச செயலர் ஏ. சோதிநாதன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(50- 111)

## சமாதான தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்

வண்ணீண, செப்.24

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம், சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு நடத்திய விளையாட்டுப் போட்டிகளின் இறுதித் தேர்வு கடந்த வெள்ளிக்கிழமை கைதடி மேற்கு, சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றன.

பரிசுக்குத் தெரிவானோர் விவரம் வருமாறு:-

**வட்டத்துள் சைக்கிள் ஓட்டம்:**
இ.ஜெறீனா, என்.பகிரதன், நிஷன்.

**பெண்களுக்கான சங்கீதக் கதிரை:**
இ.ஜெறீனா, வி.வனிதா, த. ராதிகா.

**12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பலூன் உடைத்தல்:**
செ. தேனுஜன், ஆ. கஜன், ஜீ.சுஜீபா

**ஆண்களுக்கான தடை தாண்டுதல்:**
கந்தையா, விஜிகரன், தர்மேந்திரன்.

**பெண்கள் வலைப்பந்தாட்டம்:**
மின்னொளி சனசமூக நிலையம், கைதடி தெற்கு - 32 புள்ளிகள், உதயதாரகை சனசமூகநிலையம் - 27 புள்ளிகள்.

**கதிரை மாற்றம்:**
நவபுரம் சனசமூக நிலையம், மின்னொளி சனசமூக நிலையம், உதயதாரகை சனசமூக நிலையம்.

**கயிறு இழுத்தல் ஆண்கள்:**
மின்னொளி சனசமூக நிலையம், உதயதாரகை சனசமூக நிலையம், நவபுரம் சனசமூக நிலையம்.

**கயிறு இழுத்தல் பெண்கள்:**
திருமணமான பெண்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (20.09.2009) மல்லாகம் குளமங்கால் புனித சவேரியார் ஆலய வளாகத்தில் நடைபெற்ற சிறந்த பாடகர் தெரிவு மற்றும் நாட்டுக்கூத்துப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**சிறந்த பாடகர் தெரிவு:**
பிரதீகா, அஜந்தா, கோபிகா.

**நாட்டுக்கூத்துப்போட்டி:**
கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையம், உடுவில் புதுமடம் கர்த்தர் ஆலய சிறுவர், மல்லாகம் புனித சவேரியார் ஆலய சிறுவர்.

அனைத்துப் போட்டிகளுக்குமான பரிசில்கள் கடந்த திங்கட்கிழமை கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற சர்வதேச சமாதான நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன. (203- 160)

## தீவுப் பகுதியில் இருநாள் மின்தடை

யாழ்ப்பாணம், செப்.24

அவசர திருத்த வேலை காரணமாக ஊர்காவற்றுறை, வேலணை, அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் 26ஆம், 27ஆம் திகதிகளில் மின்சார விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிராந்திய நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

நாளை மறுதினம் சனிக்கிழமை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5மணிவரை மேற்படி பிரதேசங்களில் மின்வெட்டு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50- 201)


பிறந்தநாள் வாழ்த்துகள்





இணுவில் கிழக்கைச் சேர்ந்த
திரு.திருமதி பாலராஜன்- குலநாயகி தம்பதிகளின்
செல்வப் புதல்விகளான
செல்வி பா.மதுமிதா
தனது 6ஆவது பிறந்த நாளையும்
செல்வி பா.ஹருணிகா
தனது முதலாவது பிறந்த நாளையும் தமது இல்லத்தில் இன்று (24.09.2009)
வியாழக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.
இவர்களை அப்பா, அம்மா, அக்கா, ஐயா, அம்மம்மா,
பெரியமாமா குடும்பம் (சுவிஸ்), சின்னமாமா, அத்தை,
தம்பி (வவுனியா) ஆசை மாமா (லண்டன்), சித்தப்பா,
சித்தி, தம்பி (இணுவில்) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் காரைக்கால் சிவன் அருள்பெற்று வாழ வாழ்த்துகின்றார்கள்.

காரைக்கால் சிவன் வீதி,
இணுவில் கிழக்கு.

வாழ்த்துபவர்
தந்தை பாலராஜன்



U C MAS உலகம் தழுவிய கணிதச் செயற்பாட்டு நடைமுறையின்
அகில இலங்கைக்கான ஏகப் பிரதிநிதிகள்

Genesis Academy Lanka Pvt. Ltd.,
*A BOI Approved Co, National Franchisee for U C MAS Mental Arithmetic Sri Lanka*
No. 32, 36th Lane, Wellawatte, Colombo - 6, Sri Lanka. Email : info@ucmas.lk Web : www.ucmas.lk

"ஜெனீசிஸ் அக்கடமி லங்கா பிறைவேற் லிமிட்டெட்"டின் U C MAS கணிதச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த யாழ்.குடாநாட்டுக்கென நியமிக்கப்பட்ட ஒரேயொரு நிறுவனம்.

- R&B U C MAS ACADEMY

யாழ்.குடாநாடு பூராவும் புதுப்பொலிவுடன் தனது கல்விச் சேவையைப் பெரிய அளவில் விஸ்தரிக்கின்றது.

5 வயது முதல் 13 வயது வரையான மாணவச் செல்வங்களுக்கு 'அபாகஸ்' மணிச்சட்ட கணிதச் செயற்பாட்டு விருத்திக்கு 2004ஆம் ஆண்டு முதல் பயிற்சியளித்து கல்விப் பணியில் சாதனை படைத்து வரும் நிறுவனம்.

- ★ 5-13 வயதுக்கு இடைப்பட்ட உங்களது பிள்ளைகளை இப்பயிற்சி நெறியில் இணைத்து அவர்களது ஆளுமைத் திறனை வளர்த்துக் கொள்ள விரும்பும் பெற்றோர்களே!
- ★ க.பொ.த உயர்தர சித்தி தகுதியுடன் இப்பயிற்சி நெறியைக் கற்பிக்கப் பயிற்சி பெற்று, கற்பித்தலை மேற்கொள்ள ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளே!
- ★ உங்கள் பகுதியில் வாழும் மாணவர்களுக்கு இப்பயிற்சிநெறி வசதியை ஏற்படுத்திக் கொடுக்க விரும்பும் பிரமுகர்களே! கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களே!
- ★ ஏற்கனவே இப்பயிற்சி நெறியினை நடைமுறைப்படுத்தி இடைநிறுத்த நேர்ந்த கல்வி நிறுவனங்களின் முகாமையாளர்களே!

மீண்டும் இக்கல்விப் பணியில் இணைந்து செயற்படவும், பயனடையவும் பெறுமதிமிக்க வாய்ப்பொன்றினை உங்களுக்கு ஏற்படுத்தித் தரவுள்ளோம். தாமதமின்றி எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். அரிய வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன் அடையுங்கள்.

(சி/560992)

தொடர்பு: R&B U C MAS ACADEMY,
No-75/12 Front Lane, Palaly Road, Thirunelvely, Jaffna. Mobile No-0773164399.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிச் சிறார்களிடையேயான விளையாட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள். விருந்தினரை முன்பள்ளி மாணவன் ஒருவன் கைலாகு கொடுத்து வரவேற்பதையும் வலி .தென்மேற்கு சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் கேமளா சிவஜோதி மங்கள விளக்கேற்றுவதையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ ஒலிம்பிக் தீபத்தை வீரர்களிடம் கையளிப்பதையும் முதல் மூன்று படங்களிலும் மாணவர்களின் 'பான்ட்' வாத்திய அணிவகுப்பை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள். சரவ்ணன்)

# முகாமிலுள்ளோரை உடன் விடுவிக்குக! திருமா கட்சி மகளிர் இயக்கம் தீர்மானம்

திருநெல்வேலி, செப். 24

இலங்கையில் முள்வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மகளிர் விடுதலை இயக்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மகளிர் விடுதலை இயக்க தென் மண்டல செயற்குழுக் கூட்டம் பாளையங்கோட்டையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

இலங்கையில் முள்வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுதலை செய்து அவர்கள் சொந்த ஊர்களில் குடியேற அனுமதிக்க வேண்டும்.

மகளிர் விடுதலை இயக்கத்திற்கு தமிழ்நாடு முழுவதும் கிளைகள் அமைத்து உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும். ஆண்டுக்கு இரண்டு முறை மாநாடு நடத்த வேண்டும். (சி)

## குளவிகளால் தாக்கப்பட்ட இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,செப்.24

தேன் எடுக்கச் சென்றவர்களால் துரத்தப்பட்ட குளவிகள் வீதியில் சென்ற இருவரைத் தாக்கியுள்ளன.

இச் சம்பவம் மீசாலையில் இடம் பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சின்னையா (வயது71), எஸ்.சிவகுமார்(வயது-41) ஆகியோர் குளவிகளால் தாக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கொழும்புத்துறை சனசமூக நிலையம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.24

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிலையக் கட்டடத்தின் சேதமடைந்த பகுதிகள் மீள கட்டப்பட்டு வர்ணம் பூசும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (50-224)

# உலகத் தமிழ் மாநாடு குறித்து தகவல் தர இணையம் ஆரம்பம்; தமிழக அரசு முடிவு

சென்னை, செப்.24

ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாடு பற்றி தமிழறிஞர்களுக்கு அடிக்கடி தகவல்களைத் தர இணையத்தளம் ஒன்றை தொடங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு திங்களன்று வெளியிட்ட செய்திக் குறிப்பின் விவரம் வருமாறு -

ஒன்பதாம் உலகத் தமிழ் மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம், முதல்வர் கருணாநிதி தலைமையில் அவரது இல்லத்தில் திங்களன்று நடந்தது. கூட்டத்தில், ஒன்பதாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்துவது குறித்து, உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத் தலைவர் பேராசிரியர் நெபுரு கரோசிமாவை தொடர்பு கொள்வது குறித்தும், உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத் துணைத்தலைவர் முனைவர் வா.செ. குழந்தைசாமி இதற்காக, அதன் நிர்வாகக் குழு கூட்டத்தைக் கூட்டி, அதில் இந்த மாநாடு பற்றிய உரிய ஒப்புதலைப் பெறுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இதைக் குறிப்பிட்டு முதல்வர் கருணாநிதி, உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத் தலைவருக்கும், துணைத்தலைவருக்கும் கடிதம் எழுதுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. ஒன்பதாம் உலகத் தமிழ் மாநாடு குறித்து அனைத்து நாடுகளிலும் உள்ள தமிழறிஞர்களுக்கு அவ்வப்போது தகவல்களை தர இணைய தளம் ஒன்றை பதிவு செய்து தொடங்கவும் முடிவெடுக்கப்பட்டது - என்றுள்ளது. (சி)

# இலங்கைக்கு எதிரான இராமேஸ்வரம் மீனவரின் வேலைநிறுத்தம் 7 ஆவது நாளாக நேற்றும் நீடிப்பு

இராமேஸ்வரம், செப்.24

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை நடத்திவரும் தாக்குதலைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் 7ஆவது நாளாக நேற்றும் தொடர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில மாதங்களாக மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதும், அவர்களைப் பிடித்துச் செல்வதும் தொடர்கதையாகி வருகிறது. மீனவர்களைத் தாக்கியதைக் கண்டித்தும், மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய 5 மாவட்ட மீனவர்கள் கடந்த மாதம் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் மீன்வளத்துறை அமைச்சர் கே.பி.சாமி பேச்சு நடத்திய தையடுத்து 21 நாட்கள் தெடர்ந்த வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இதற்கிடையே, கடந்த 16ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 21 மீனவர்களையும், 5 விசைப்படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றனர். இவர்களை விடுவிக்கக் கோரி, அன்று முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று 6 நாளாகப் போராட்டம் நீடித்தது.

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து மீன்கள் ஏற்றுமதி மூலம் நாள்தோறும் மத்திய அரசுக்கு ரூபா 13 லட்சம் அன்னிய செலாவணி கிடைக்கும். இந்த வருவாய் தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. 10 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 800 இற்கும் மேற்பட்ட படகுகள் துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (சி)

# தமிழ்க் கைதிகள் குறித்து பிரதி நீதியமைச்சர் கூறிய கருத்தை ஏற்க முடியாது என்கிறார் மனோ எம்.பி.

கொழும்பு, செப். 24

சிறைச்சாலைகளில் இன்று உண்ணாவிரதம் இருக்கின்ற தமிழ் கைதிகள் ஆடுகளையும், கோழிகளையும் திருடிய குற்றங்களுக்காகவோ அல்லது போதைவஸ்துப் பாவனைக் குற்றங்களுக்காகவோ கைதானவர்கள் அல்லர் என்பதையும், இந்நாட்டின் பேரினவாதம் ஆரம்பித்து வைத்த யுத்தத்துடன் தொடர்புடைய அரசியல் வன்முறையாளர்கள் அல்லது வன்முறைகளுக்கு உதவியவர்கள் என்ற அடிப்படையிலேயே கைதாகி சிறைவாசம் அனுபவிக்கின்றவர்கள் என்பதையும் பிரதி நீதி அமைச்சர் புத்திரசிகாமணி புரிந்து கொள்ள வேண்டும்.

- இவ்வாறு மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் அர்த்தமற்றது என்றும் அரசியல் கைதிகள் என்று எவரும் கிடையாது என்றும் பிரதி நீதியமைச்சர் தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பில் பதிலளித்துள்ள மனோ எம்.பி. மேலும் கூறியவை வருமாறு -

1997, 1989 ஆகிய ஆண்டுகளில் மிக மோசமான வன்முறைகளில் ஈடுபட்டு தென்னிலங்கையை எரித்து பாரிய அழிவுகளை ஏற்படுத்திய ஜே.வி.பியினர் இன்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள்.

தமிழ்த் தேசியப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்தி வன்முறைகளில் ஈடுபட்ட டக்ளஸ் தேவானந்தாவும், விநாயகமூர்த்தி முரளிதரனும் இன்று மத்திய அரசிலே அமைச்சர்களாக இருக்கின்றார்கள். அதேபோல் கிழக்கு மாகாண முதலமைச்சராக முன்னாள் போராளி பிள்ளையான் இருக்கின்றார். இவை மகிழ்ச்சிக்குரிய மாற்றங்களாகும். அதேபோல் மிகச் சமீபத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரபலஸ்தர்களான தயா மாஸ்டரும், ஜோர்ஜ் மாஸ்டரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதுவும் மகிழ்ச்சிக்குரிய நடவடிக்கையாகும். ஆனால் புலிகள் இயக்கத்தின் கீழ்மட்ட உறுப்பினர்களாக இருந்தவர்களும், உறுப்பினர்களுக்கு உடுதுணி மற்றும் உணவு கொடுத்து உதவியவர்களும் இன்றுவரையிலும் சிறைவாசம் அனுபவிக்கிறார்கள்.

ஏன் இந்தப் பாரபட்சம் என்ற கேள்விகள் இன்று தமிழ் மக்கள் மனங்களிலும் குறிப்பாக இந்தத் தடுப்புக்காவல் கைதிகளின் குடும்பத்தவர்கள் மனங்களிலும் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன.

அவர்கள் சரணடைந்தார்கள், இவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற வாதங்களை அரசின் நீதித்துறை அமைச்சர்கள் மிலிந்த மொரகொடவும், புத்திரசிகாமணியும் எடுத்து வைப்பது நியாயமாகாது. ஜே.வி.பியினருக்கும் புலிகளின் மேல் மட்டத்தினருக்கும் காட்டப்பட்டுள்ள கவனிப்பு அனைத்து வன்முறை அரசியல் கைதிகளுக்கும் காட்டப்பட வேண்டும் என்ற எமது கருத்து இன்று நாடு முழுக்க வாழ்கின்ற தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தாகும்.

சிறைக்கைதிகளைத் தவிர வெறுமனே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெருந்தொகைத் தமிழர்களும் இருக்கின்றனர். இவர்களில் ஆண்களும், பெண்களும், வயோதிபர்களும், நோயாளிகளும் இருக்கின்றனர். குழந்தைகளைப் பிரசவித்த பெண்களும் இந்து, கத்தோலிக்க மதகுருமார்களும் இருக்கிறார்கள்.

தமிழ் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்குங்கள். இது சாத்தியமாக விட்டால் தயா மாஸ்டருக்கும் ஜோர்ஜ் மாஸ்டருக்கும் வழங்கியதைப்போல் சட்ட ரீதியான பிணை வழங்குங்கள். இதுவும் சாத்தியமில்லாவிட்டால் அடையாளம் காணப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் புனருத்தாபன வேலைத் திட்டங்களில் அரசியல் வன்முறைக் கைதிகளையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

மேற்கண்ட மூன்று முறைமைகளின் அடிப்படையில் இவர்களுக்கு சிறைகளிலிருந்தும் தடுப்பு முகாம்களிலிருந்தும் விடுதலையைப் பெற்றுக் கொடுங்கள். அரசிலே அமைச்சர்களாக இருக்கும் தமிழ் அரசியல்வாதிகளிடமிருந்து இந்நாட்டிலே வடக்கிலும், கிழக்கிலும், மேற்கிலும், மலையகத்திலும் வாழும் தமிழ் மக்கள் குறைந்தபட்சமாக எதிர்பார்ப்பது இதுதான் - என்றார். (சி)

## ஞானச்சுடர் வெளியீடு நாளை

வடமராட்சி,செப்.24

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' ஆன் மீக சஞ்சிகையின் புரட்டாதி மாத இதழ் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை சிவநெறிச் செம்மல் சிவ.ஆறுமுகசுவாமியும் மதிப்பீட்டுரையை பண்டிதர் சி.வேலாயுதமும் நிகழ்த்துவர். (201- 236)



ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தம்பாட்டி சிறிய கூட்டுறவு நகர் கிளை திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாவை வெட்டிக் கிளையைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் நி.சுந்தரலிங்கம், பொது முகாமையாளர் திருமதி தே.மேரி டொறின் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிமன்ற செயலாளர் பதவிகளை நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.24

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர் பதவிகளை நிரப்புவதற்காக உள்ளூராட்சி செயலாளர் சேவை உருவாக்கப்படவுள்ளது.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண் டராதென்னக்கோன் மேற்படி உள்ளூராட்சி மன்ற செயலாளர் சேவையை உருவாக்குவதற்கான அதிகாரங்களை அவ்வப் பகுதி மாகாண ஆளுநர்களிடம் வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்ற செயலாளர் சேவையை உருவாக்குவதற்கான குழுவின் தலைவராக சி.ரங்கராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாணத்தில் புதிதாக உருவாக்கப்படவுள்ள உள் ளூராட்சி மன்ற செயலாளர் சேவை, இலங்கை நிர்வாக சேவை தரத்திற்கு சமாந்தரமாகத் தயாரிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.




## யாழ் நகரில்

முதன் முறையாக நம்பமுடியாத கட்டணக்கழிவில்
சர்வதேச கற்கை நெறிகள்

**Pre. MBA (9 Months)**

To whom — பட்டதாரிகள், வர்த்தக வியாபார பட்டதாரி அல்லாதவர்கள், உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA) முடித்தவர்கள்

இப்பாடநெறியினை முடித்தவர்கள் MBA கற்கை நெறியினைலண்டனில் முதற்தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தில் தொடரமுடியும், 100 % விசா உத்தரவாதத்திற்கு நிறுவனமே பொறுப்பேற்கும்.

HND in Business Management - Edexcel
HND in Computing - Edexcel
HND in Quantity Surverlng - Edexcel

Duration 16 Months

Admission requirements:
2 passes in G.C.E. (A/L) in any subject and 6 passes inclusive of two credit passes for Englsih and Mathematics in G.C.E (O/L) examination or Successful completion of BCHS Access programming.

Access Programming (Foundation Degree Programme)
O/L முடித்த மாணவர்களும் சர்வதேச பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான முன்னோடிப் பாடநெறி Duration 6 Months
Admission requirements:
6 passes in G.C.E. (O/L) Examination

அனைத்துப் பாடநெறிகளுக்குமான புதியபிரிவுகள் ஆரம்பிக்கப்படுகின்றன
Batch 2 26.09.2009 — Batch 3 30.09.2009

Foundation Dip in Hospitality management Duration 6 Months
IELTS Duration 6 Months
Executive Secretary Diploma Duration 6 Months

Diploma in English
Advance Diploma in English — Duration 6 Months

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்கள் உயர்கல்வியினை இலகுவாக பூர்த்தி செய்யவும் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் தயாரிக்கப்பட்டுள்ளது.

எமது நிறுவனத்தில் கற்று வெளியேறும் மாணவர்களுக்கு 100 % Students Visa பெற்றுக் கொள்வதற்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் உத்தரவாதம் வழங்கப்படும்

**BCHS**
No.15, Sirambiyadi Lane,
Off Stanley Road, Jaffna.
HotLines: 0773501499 / 0777222422 / 0714299935
021 2224550
Email: info@bchs.lk


# மரண அறிவித்தல்

## திருமதி விசயரட்ணம் சரஸ்வதி

*(யாழ்ப்பாணம், ரட்ணம் பாமசி உரிமையாளரின் மனைவி)*



காரைநகர், வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் காரைநகர், வாரிவளவை வசிப்பிடமாகவும் தற்போது No 59, ரட்ணகரா பிளேஸ், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசயரட்ணம் சரஸ்வதி (குஞ்சு) நேற்று (23.09.2009) புதன்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மீனாட்சி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான குமாரவேலு-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் விசயரட்ணத்தின் அன்பு மனைவியும் ஜயலட்சுமி, சிவசுதன் (ரட்ணம் பாமசி), மகாலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் கணேசன் (பொறியியலாளர்), செந்தில்நாதன் (ஆசிரியர்), சிவரூபி ஆகியோரின் அன்பு மாமியும் லக்சனா, சங்கர், கோசலன், சஜீவன், யதர்சினி, ஜனனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் செல் லையா, கமலாதேவி, சந்தானலட்சுமி, குணரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.09.2009) வியாழக்கிழமை பி.ப.3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

NO- 59, ரட்ணகரா பிளேஸ்,
தெகிவளை.
T.P. 011 2727107 (89175)

தகவல்:
கணவர்,
பிள்ளைகள்.

## 6 நாடகங்களின் ஆற்றுகை இன்று

சுன்னாகம், செப் 24

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் வெறுவெளி அரங்கக் குழுவால் ஆறு நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்நாடக ஆற்றுகைகள் இடம் பெறவுள்ளன. ஜி.சி.ஈ. சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கும் மாணவர் இவ்வாற்றுகையைப் பார்வையிட முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (50-38)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 24

வலிகாமம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இசை, நடன, ஆசிரியர்களுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளது. இசை, நடன பாடங்களைக் கற்கும் ஆசிரியர்கள் இச் செயலமர்வில் பங்குபற்ற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள் ளது. (50-38)

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

குப்பிழான், ஏழாலை
சிறப்பு கூட்டுறவு நகர்கள்
**(MINI CO- OP CITY)**

## திறப்பு விழா அழைப்பு

காலம் : இன்று (24.09.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி

தலைமை : **திரு. சி. குமரவேல்** அவர்கள்
(தலைவர், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

பிரதம விருந்தினர்:

**கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா** அவர்கள்
(சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்)

சிறப்பு விருந்தினர்கள்:

**திரு.சில்வேஸ்திரி அலன்ரின்** (உதயன்) அவர்கள்
(சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சின் இணைப்பாளர், ஈ.பி. டி.பி யாழ். மாவட்ட அமைப்பாளர்)

**திரு. ந. மோகன் தோழர்.**
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சுன்னாகம் அமைப்பாளர்)

**திரு.பொ.சிவலிங்கம்** அவர்கள்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

**திருமதி.மஞ்சுளாதேவி சதீசன்** அவர்கள்
(பிரதேச செயலர், வலி-தெற்கு, உடுவில்)

**திருமதி.எஸ்.முருகநேசன்** அவர்கள்
(செயலாளர், வலி- தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்)

**நிகழ்ச்சி நிரல்**

மங்கள விளக்கேற்றல்
சிறப்பு கூட்டுறவு நகர் திறந்து வைத்தல்
(பிரதம விருந்தினர் அவர்களால் திறந்து வைக்கப்படும்)
தலைமையுரை
பிரதம விருந்தினர் உரை
சிறப்பு விருந்தினர் உரை
நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம், சுன்னாகம். — பணிப்பாளர்கள், பணியாளர்கள், (சி/561102)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1124 நீலம்

வெற்றி இலக்கங்கள்: சிங்கம் 18 19 29 32

22-09-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,973,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 208,827 | 20/- | 4,176,540/- |
| 2 இலக்கங்கள் | 19,096 | 40/- | 763,840/- |
| 1 இல. + லக்கினம் | 18,904 | 60/- | 1,134,240/- |
| 2 இல. + லக்கினம் | 1,756 | 200/- | 351,200/- |
| 3 இலக்கங்கள் | 519 | 1000/- | 519,000/- |
| 3 இல. + லக்கினம் | 41 | 10,000/- | 410,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,973,750/- | - |
| மொத்தம் | | | 7,954,820/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 249,151 | | 8,454,820/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,905,800/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : டபிள்யூ.எம்.யூ.பீ.வேகெதர, கலகமுவ
கைத்தொலைபேசி வெற்றியாளர்: ஜீ.எஸ்.ரி.தெல்வல, மஹரகம

2009 செப்டம்பர் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 400534367-4-39 |
| கண்டி | 400532173-2-43 |
| புத்தளம் | 400531723-9-22 |
| கம்பஹா | 400523216-8-14 |
| திருகோணமலை | 400534344-0-21 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன்ஸ்கிண்ணம்: ஆரம்பம் இலங்கைக்கு முதல் வெற்றி!






செஞ்சூரியன், செப். 24

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி முதல் வெற்றியைப் பதிவு செய்துகொண்டது. மழை குறுக்கிட, 'டக்வேர்த்-லூவிஸ்' விதிமுறைப்படி தென்னாரிக்காவை 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது இலங்கை அணி. டில்ஷானின் சதம், மெண்டிஸின் சுழல் ஜாலம் இரண்டும் கலந்து இலங்கை அணியின் வெற்றிக்குப் பக்கபலமாக அமைந்தன.

தென்னாபிரிக்காவில் 'சம்பியன்ஸ் கிண்ண' கிரிக்கெட் தொடர் (மினி உலகக் கிண்ணம்) நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. முதல் போட்டியில் தென்னாபிரிக்கா-இலங்கை அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணியின் தலைவர் கிரேம் ஸ்மித், முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார்.

அந்தவகையில் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இலங்கை அணியின் அனுபவம் வாய்ந்த ஜெயசூர்யா அதிர்ச்சியான ஆரம்பத்தைக் கொடுத்தார். இவர், ஸ்டைனின் வேகத்தில் வெறும் 10 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். இதற்குப் பின் டில்ஷான்-அணித்தலைவர் சங் ககரா ஜோடி இணைந்து சிறப்பாக ஆடினர்.

போர்னல், ஸ்ரைன், கலிஸ், மார்கல் உள்ளிட்ட தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்துவீச்சாளர்களை மிகச் சுலபமாகச் சமாளித்தனர். இருவரும் பவுண்டரிகளாக விளாசித் தள்ள, ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

இந்த நேரத்தில் பந்துவீச வந்த டுமினி திருப்புமுனை ஏற்படுத்தினார். இவரது சுழலில் அரைச்சதம் கடந்த சங்கக்காரா 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக சங்கக்காரா-டில்ஷான் ஜோடி 158 ஓட்டங்களைச் சேர்த்தது.

தனது அபார ஆட்டத்தைத் தொடர்ந்த டில்ஷான் ஒரு நாள் அரங்கில் 3ஆவது சதத்தை எட்டினார். இவர் 106 ஓட்டங்களுடன் (16 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) ஸ்ரைன் வீசிய பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய ஜெயவர்த்தன பொறுப்பாக நின்று ஆடினார். இவருக்கு சமரவீர ஒத்துழைப்புக் கொடுக்க ஜெயவர்த்தன 77 ஓட்டங்களை விளாசினார். பின்னர் சமரவீரா 37 ஓட்டங்களுடன் வெளியேற, பின்னர் வந்த கண்டம்பியும் (6) ஏமாற்றினார்.

இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 319 ஓட்டங்களைக் குவித்தது.

310 என்ற கடின இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு ஆம்லா (2) ஏமாற்ற மளித்தார். பின்னர் கேப்டன் ஸ்மித், காலிஸ் இணைந்து துணிச்சலாக போராடினர். அதிரடியாக ஆடிய ஸ்மித், குலசேகர வீசிய 10ஆவது ஓவரில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடித்து மிரட்டினார். இதையடுத்து 'சுழல் மாயாவி' மெண்டிஸை அழைத்தார் அணித்தலைவர் சங்கக்காரா. இதற்கு பலனும் கிடைத்தது. தனது முதல் பந்திலேயே ஸ்மித்தை (58) வெளி யேற்றினார். தொடந்து சுழலில் அசத்திய மெண்டிஸ் அடுத்தடுத்த பந்துகளில் கலிஸ்(41), டுமினியை(0) ஆகியோரையும் வீழ்த் தினார். மலிங்கவின் வேகத்தில் டி வில்லியர்ஸ் (24) வீழ்ந்தார். பௌச்சர்(26), போத்தா(21) ஆகியோரும் அதிக நேரம் நீடிக்கவில்லை.

தென்னாபிரிக்க அணி 37.4 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 206 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. இதையடுத்து 'டக்வேர்த்-லூவிஸ்' விதிமுறைப்படி இலங்கை அணி 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டது என அறிவிக்கப்பட்டது.

ஆட்ட நாயகனாக சதமடித்த டில்ஷான் தெரிவுசெய்யப்பட்டார்.

## சிறப்பம்சங்கள்

### முதலாவது...

* நேற்றுமுன்தினம் தொடங்கிய 'சம்பியன்ஸ் கிண்ண'த் தொடரில், முதல் பந்தை ஸ்ரைன் வீசினார். அதில் டில்ஷான் ஓட்டம் எதுவும் எடுக்கவில்லை.
* ஸ்ரைனின் பந்து வீச்சில் டில்ஷான் முதல் பவுண்டரி அடித்தார்.
* முதல் விக்கெட்டைக் கைப்பற்றியவர் ஸ்ரைன். வீழ்ந்தவர் ஜெயசூரியா.
* மார்கல் வீசிய பந்தில் முதல் சிக்ஸரை டில்ஷான் விளாசினார்.
* முதல் அரைச் சதம் சங்கக்காரா அடித்தார்.
* முதல் சதத்தை டில்ஷான் எடுத்தார்.

### வரவு குறைவு

'ருவென்ரி-20' வரவால் ஒரு நாள் போட்டிகளுக்கான வரவேற்புக் குறைந்து வருவது 'சம்பியன்ஸ் கிண்ண'த் தொடரின் முதல் போட்டியிலேயே அம்பலமானது.

சொந்த மண்ணில் தென்னாபிரிக்கா விளையாடும் போட்டியைக் காண உள்ளூர் ரசிகர்கள் அதிகம் வரவில்லை. இதனால், அரங்கின் பெரும்பாலான பகுதிகளில் இருக்கைகள் வெறுமனவே காணப்பட்டன.

### ஜெயவர்த்தன '50-50'

நேற்றுமுன்தினம் அசத்தலாக ஆடிய இலங்கை வீரர் ஜெயவர்தன ஒரு நாள் அரங்கில் தனது 50ஆவது அரைச்சதம் அடித்தார்.

### 'சம்பியன்ஸ் கிண்ணம்-2009'

#### இன்றைய ஆட்டம்

அணிகள்

தென்னாபிரிக்கா - நியூஸிலாந்து

| மைதானம் | நேரம் |
|---|---|
| செஞ்சூரியன் | பகல் 1.00 |

# இலங்கை அகதிகளின் அவலங்களை ஐ.நா. கூட்டத்தில் விவாதிக்க உலகத் தலைவர்களிடம் வேண்டுகோள்

## போலி வாக்குறுதிகளால் ஏமாற்றக் கூடாது என்கிறது மனித உரிமைகள் காப்பகம்

நியோர்க், செப்.24

நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ள உலகத் தலைவர்கள், இலங்கையில் மோதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் அவலங்கள் பற்றி, முன்னுரிமை கொடுத்து ஆராயவேண்டும் என்று சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, இவ்விடயத்தை வலியுறுத்தி ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களுக்கும் சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் தடுப்பு முகாம்களில் சட்டவிரோதமாக முடக்கப்பட்டுள்ள மக்களை உடனடியாக விடுவிக்குமாறு ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்துக்காக நியூயோர்க்கில் கூடியுள்ள உலகத் தலைவர்கள் வேண்டுகோள் விடுக்கவேண்டும்.

பிட்ஸ்பேர்க்கில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்களும் இது குறித்து அக்கறை கொள்ள வேண்டும்.

### எப்போது திருப்பி அனுப்பப்படுவர் என்பது குறித்து குழப்பமடைந்த நிலை

முகாம்களில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்மை, தொடர்புகள் இன்றி இரகசியமாகத் தடுத்து வைக்கப்படுதல், பலவந்தமாகக் காணாமற் போதலுக்கான சாத்தியக்கூறுகள், மோசமான நிலைமை, சனநெரிசல், சுகாதார வசதியின்மை போன்ற பிரச்சினைகள் குறித்து மனித உரிமைக் கண்காணிப்பகம் அறிந்துள்ளது.

முகாமில் உள்ள மக்களுக்கு அவர்கள் எப்போது திருப்பியனுப்பப்படுவார்கள் என்பது குறித்து அரச அதிகாரிகள் நேர்மையான பதிலை அளிக்காமல் அவர்களை நிச்சயமற்ற - குழப்பமான - நிலையில் வைத்துள்ளனர்.

யுத்தம் மற்றும் இடம்பெயர்வு காரணமாகப் பெருமளவு துயரங்களை ஏற்கனவே எதிர்நோக்கிய இந்த மக்களுக்கு முழுமையான நடமாட்டத்தை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையில் விடுக்கப்படும் வேண்டுகோள்களுக்கு உலகத் தலைவர்கள் தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டுமென மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். முகாம்களிலுள்ள மக்களுக்கு சுதந்திரத்துக்கான உரிமையுள்ளது. அரசு தான் நினைத்த நேரத்தில் அதனை வழங்க முடியாது.

### விடுவிக்கப்பட்டவர்கள் ஊர்களில் வேறு முகாம்களில் மேலதிக சோதனைக்குள்...

பெருமளவு இடம்பெயர்ந்த மக்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என அரசு தெரிவிப்பது பொய்யானது.

பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் செப்ரெம்பர் 12 ஆம் திகதி அரசு சுமார் 10 ஆயிரம் பேரை முகாம்களிலிருந்து தமது சொந்த இடங்களுக்கு அனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இவர்கள் தமது சொந்த ஊர்களிலுள்ள வேறு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அங்கு அவர்கள் மேலதிக சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இலங்கைப் படையினர் இந்த விசாரணை தள் மேலும் ஆறுமாதம் நீடிக்கலாம் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவது முக்கியமானது. எனினும், மக்களை அடைத்து வைப்பதற்கு இதனைக் காரணமாகத் தெரிவிக்க முடியாது என பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத் தொடருக்கு விஜயம் மேற்கொள்ளும் பிரதிநிதிகள் குழுவினருடன் நடத்தப்படும் பேச்சுகளில் இலங்கையில் இடம்பெயர்ந்தோரின் நிலைமைக்கு முக்கியத்துவம், முன்னுரிமை அளிக்குமாறும் மனித உரிமைக் கண்காணிப்பகம் உலக தலைவர்களைக் கேட்டுக்கொள்கின்றது.

இலங்கை அரசு கடந்த காலங்களில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என சுட்டிக்காட்டியுள்ள பிரட் அடம்ஸ், ஐ.நாவும் ஏனைய தரப்புகளும் இந்த விடயங்களில் உடனடி முன்னேற்றத்தைக் கோரவேண்டும். அரசின் போலி வாக்குறுதிகளால் மீண்டும் ஏமாறக்கூடாது எனத் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுதியான நடவடிக்கைகளே தற்போது தேவைப்படுகின்றன. மக்கள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் கூட்டான, உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்று உள்ளது.

ஐ.நா. தலைமையகம் முன்பாக ஈழத் தமிழர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படையைக் கண்டித்து இராமேஸ்வரத்தில் நாளை ஆர்ப்பாட்டம்

## ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை, செப். 24

இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 21 தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும், மீனவர்களைத் தொடர்ந்து தாக்கி வரும் இலங்கைக் கடற்படையைக் கண்டித்தும் அ.தி.மு.க. சார்பில் நாளை இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைக் கடற்படையினரின் தொடர் தாக்குதலைத் தடுத்து நிறுத்தக் கோரி கடந்த மாதம் தமிழக மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் தமிழக அரசின் சார்பில் அளிக்கப்பட்ட உறுதிமொழியை அடுத்து மீண்டும் கடலுக்குள் சென்று மீன் பிடித் தொழிலை செய்ய ஆரம்பித்தனர்.

ஆரம்பித்த ஒரு சில நாள்களிலேயே இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். கடந்த 16 ஆம் திகதி இராமேஸ்வரம் பகுதியில் 400 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுற்றி வளைத்து, வலைகளை அறுத்து, அவர்களுடைய படகுகளைச் சேதப்படுத்தி மீன்பிடிச் சாதனங்களை கடலில் தூக்கி எறிந்ததோடு மட்டுமல்லாமல், 5 படகுகளையும் 21 மீனவர்களையும் கடத்திச் சென்றுள்ளனர்.

தமிழக மீனவர்களை ஈவு இரக்கமின்றி துன்புறுத்துவது, துப்பாக்கியால் சுடுவது, சிறைப்பிடிப்பது ஆகியவற்றை இலங்கை அரசு வாடிக்கையாகக் கொண்டு இருக்கிறது. இதுபோன்ற துயரச் சம்பவம் நடைபெறும் ஒவ்வொரு முறையும் இலங்கை அரசைக் கண்டித்து அறிக்கை விடுவதை கருணாநிதி வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்.

மத்திய அரசை பொறுத்தவரையில், தமிழக மீனவர்களின் பிரச்சினையை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. இந்த நிலைமை நீடிக்குமேயானால் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாக்கப்படும். மத்திய அரசுடன் உடனடியாக பேச்சு நடத்தி, சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்காமல், பெயரளவில் இலங்கை அரசைக் கண்டித்து அறிக்கை விடுவதும், மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பேட்டி அளிப்பதும் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர உதவாது. கருணாநிதியின் இது போன்ற மென்மையான அணுகுமுறைக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மீனவர்களை வாழவிடாமல் தொடர்ந்து துன்புறுத்திக்கொண்டு இருக்கும் இலங்கைக் கடற்படையினரைக் கண்டித்தும், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது படகுகளையும் மீட்க மத்திய அரசு மூலமாக தி.மு.க. அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் அ.தி.மு.க. இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தின் சார்பில் நளை 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணி அளவில் இராமேஸ்வரத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்றுள்ளது.



இலங்கைப் பிரச்சினையில் நடவடிக்கை எடுககக்கோரி தி.மு.க. கூட்டணி கட்சிகளை சேர்ந்த தமிழக எம்.பிக்கள் டில்லியில் நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து மனுக் கொடுத்தனர். அப்போது எடுக்கப்பட்ட படம். பிரதமரின் இடது பக்கத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் அமர்ந்துள்ளார்.

# தமிழக மீனவர் மீது மீண்டும் சூடு!

மணமேல்குடி, செப். 24

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது இந்திய எல்லைக்குள் இலங்கைக் கடற்படையினர் திங்கட்கிழமை இரவு துப்பாக்கிச் சூடு நடத்தினர். மேலும், மீனவர்களின் விசைப் படகுகளைச் சேதப்படுத்தியதுடன், வலைகளையும் கடலுக்குள் அறுத்தெறிந்தனர்.

இந்தச் சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக தமிழக மீனவர்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும், உயிர் பிழைத்தால் போதும் என்ற நிலையில் அவர்கள் மிரட்டி அனுப்பப்பட்டுள்ளனர்.

கோட்டைப்பட்டினத்திலிருந்து 243 விசைப்படகுகளில் கடந்த திங்கட்கிழமை மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

அப்போது அந்தப் பகுதியை நோக்கி வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களின் படகுகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். தொடர்ந்து முன்னேறிய அவர்கள் மீனவர்களின் படகுகளைச் சுற்றிவளைத்தனர். தொடர்ந்து, தமிழக மீனவர்களின் படகுகளுக்குள் வந்த இலங்கைக் கடற்படையினர், மீனவர்களின் படகுகளிலிருந்த வலைகள், கயிறு மற்றும் தளபாடப் பொருள்களை வெட்டி கடலுக்குள் வீசி எறிந்தனர். பின்னர், துப்பாக்கி முனையில் தமிழக மீனவர்களை மிரட்டி அனுப்பி விட்டு தங்கள் படகுகளில் அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து மீனவர் போஸ் கூறியவை வருமாறு -

இலங்கைக் கடற்படையினர் சுடத் தொடங்கியதுமே படகுகளை நிறுத்திவிட்டோம். அவர்கள் சூழ்ந்ததும் கைகளை உயர்த்தி நின்றோம். மீனவர்கள் என்று நன்கு அறிந்தும்கூட அவர்கள் எங்களை விடவில்லை. வலைகளை எங்கள் கைகளாலேயே அறுத்தெறியுமாறு கூறினர். வேண்டாம் என்று கெஞ்சினோம். பின்னர், அவர்களே அறுத்தெறிந்தனர் -

# தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுத்து முறியடிக்கத் தயார்

## அமைச்சர் சிதம்பரம் ஆணித்தரம்

டில்லி, செப். 24

இந்திய நகரங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினால், சரியான பதிலடி கொடுப்போம் - என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

டில்லியில் 22 பொலிஸ் நிலையங்களை தொடக்கி வைத்த ப.சிதம்பரம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இந்திய நகரங்கள் மீது பண்டிகை நாள்களையொட்டி, தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற உளவுத்துறையின் தகவலின் பேரில் இந்தயா முழுவதும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

எல்லை தாண்டிய தீவிரவாதம் மற்றும் ஊடுருவல் பற்றிய அனைத்து தகவல்களையும், நமது உளவுத்துறை உடனுக் குடன் அளித்து வருவதால் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய நகரங்கள் மீது தீவிரவாதிகளின் தாக்குதல் நடைபெறும் என்று யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை. தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினால், நமது பாதுகாப்பு படையினர் சரியான பதிலடி கொடுப்பார்கள்.

தீவிரவாதிகளின் எந்த மிரட்டலையும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து முன் ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருக்கின்றன.

டில்லியில் நடக்க இருக்கும் காமன் வெல்த் விளையாட்டு போட்டி உட்பட முக்கிய நிகழ்ச்சிகளின் போது, ஹெலிகொப்டர் மூலம் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

டில்லியை மிகவும் பாதுகாப்பான நகராக மாற்றுவோம். இங்கு மூத்த குடிமக்கள், மாணவர்கள் உட்பட அனைவரும், பாதுகாப்பாக வாழவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். பூங்காக்களில் இருக் கும் காதலர்கள் கூட பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று கருதுகிறோம். இந்த அளவுக்கு டில்லியை மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

# நடிகை எஸ்.வரலட்சுமி காலமானார்

பழம்பெரும் நடிகை வரலட்சுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினமிரவு திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு காலமானார். இவர், 'ராஜராஜ சோழன்', 'மாட்டுக்கார வேலன்', 'நீதிக்கு தலைவணங்கு', 'பணமா? பாசமா?' உட்பட பல படங்களில் நடித்தவர்.

இவர் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு கீழே விழுந்ததில் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இதற்காக அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்குச் சத்திர சிகிச்சை நடந்தது. அதில் இருந்து அவர் படுத்தபடுக்கையாக இருந்தார்.

நேற்றுமுன்தினமிரவு 8 மணிக்கு அவருக்கு திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மரணம் அடைந்தார். மரணமடைந்த எஸ்.வரலட்சுமிக்கு வயது 84. அவர் தமிழ், தெலுங்கு ஆகிய 2 மொழிகளிலும் 500 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்திருக்கிறார். அவருடைய கணவர் [illegible] எஸ்.சீனிவாசன். அவர். இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் இருக்கிறார்கள்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாவட்டச் செயலகத்தில்
கிராம சேவையாளர்
மட்டத்தில் சேவை
அடிப்படையில் இரண்டாம்
இடத்தையும், கரவெட்டிப்
பிரதேச செயலகத்தில்
முதலாம் இடத்தையும்
பெற்றமைக்காக கிராம
சேவையாளர்

**திரு. கே.ரி.புவனேந்திரன்**

அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்துவோர்
அத்தாய் மாதர் சங்கம்

(சி-561109)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி **க. கமலநாயகி** (SLPS-I)



அதிபர் சேவை தரம்-1

அன்பின் உறைவிடமாய்
அறிவின் கோபுரமாய்
ஆளுமையின் சிகரமாய்
அதிபர் தரம் ஒன்றாய் உயர்ந்திட்ட
தூண்டாமணி விளக்கே!
நின் ஆயுள் வளரட்டும்
நின் சேவை ஓங்கட்டும்.

1979 இல் இருந்து கல்விப்பணி ஏற்று 2004இல் இருந்து தரம் 1 அதிபராக பதவியுயர்வு பெற்ற எமது அதிபர் செல்வி க. கமலநாயகியை பல்லாண்டு காலம் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கொக்குவில்
யா/ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை. (89171) ஆசிரியர் கழகம்

## கண்ணீர் அஞ்சலி



*சிவசம்பு செந்தில்நாதன்*
(முகாமையாளர் இலங்கை வங்கி,
உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்,
யாழ்ப்பாணம்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிஷோர் ஒப்பந்தகாரர்
(Giso Contractor)
(89174) மலர்வசந்தம், K.K.S றோட், இணுவில்.

## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**சுவாம்பிள்ளை றெக்ஸ் கிறிஸ்ரி** (சந்திரா)
(உரிமையாளர், பசுபதி ஸ்ரோர்ஸ்)

இறந்தும் வாழும் இறவாக் காவியம் நீயே
உன்னை நாடியவர்க்கு கலங்கரை விளக்காக இருந்தவன் நீ
உதவி என்று வந்தவர்க்கு வள்ளலாகி நின்றவன் நீ
இறைபணிகள் தனியே முன் நின்று உழைத்தவன் நீ
சமுதாய மேம்பாட்டில் அக்கறை கொண்டவன் நீ
உறவுகள் நிலைத்திடவே தூண் போல நின்றவன் நீ
கடைசி வரை எமைக் காப்பாய் நீ என்றிருக்க
காலன் உன்னை இடையில் பறித்தது ஏன்?
இன்று மௌனமாக உன் வழியே தனியே சென்றது ஏன்?
கிறிஸ்ரியே மறக்குமா உன் புன்னகை முகம்
மறவாமல் என்றும் தொடர்ந்திடுவோம் உன் பணி.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.09.2009 வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு குருநாகல் மல்கடுவ மயானத்தில் நடைபெறும்.

உரிமையாளர் பா.சிறிபாதன்
கரணி மோட்டோர்ஸ்,
(89180) 164, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் பயிற்சிநெறி ஆரம்பிக்கு முன் செயலகத்தில் அனுமதி பெறவேண்டும்

## யாழ். அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப்.24

யாழ். மாவட்டத்தில் தொழில் பயிற்சி நெறியை ஆரம்பிக்க முன்னர் செயலகத்தில் அனுமதி பெறவேண்டும்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மேற்கண்ட அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்திலுள்ள அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்கள் தொழிற் பயிற்சி நெறி ஒன்றினை மேற்கொள்வதாயின் மாவட்ட செயலகத்தில் அனுமதி பெற்ற பின்னரே பயிற்சி நெறியினை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அனுமதி பெறுவதற்கு தொழிற்பயிற்சிகளை மேற்கொண்டு வரும் நிறுவனங்கள் அனைத்தும் 07.09.1995 ஆம் திகதிய வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய தமது தொழிற் பயிற்சி நிலையங்களை மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தொழிற்பயிற்சி நெறிகளை மேற்கொள்வோர் தமது தொழிற்பயிற்சி நிலையங்களை பதிவு செய்வற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மாவட்ட தொழிற் பயிற்சி கண்காணிப்பு பிரிவினூடாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பதிவினை மேற்கொள்வதற்கான விண்ணப்பப் படிவத்தினை மாவட்ட தொழிற் பயிற்சி கண்காணிப்பு பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும். புதிதாக ஆரம்பிக்கப் படும் தொழில் பயிற்சி நெறிகள் அனைத்தும் மாவட்ட செயலகத்தில் அனுமதி பெற்று ஆரம்பிக்கப் படுவதை உரியவர்கள் உறுதிப் பத்திக் கொள்ளவும் - என்றுள்ளது. (1)

## லயன்ஸ் ஏற்பாட்டில் டெங்கு தடுப்புக் கருத்தரங்கு

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட் டில் சுகாதாரப்பகுதியினரால் நீராவியடி (ஜே/101) கிராம மக்களுக்கு டெங்கு நோய் தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கும் சிரமதானமும் நாளை யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள நாவலர் ஆச்சிரமத்தில் நடத்தப்படவுள்ளன.

அந்தக் கிராம மக்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ். லயன்ஸ் கழகத்தலைவர் எஸ். தியாகலிங்கம் கேட்டுள்ளார். (1)

## யாழ். ஆஸ்பத்திரியில் தூய அன்னையின் திருவிழா

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அமைந்திருக்கும் தூய ஆரோக்கிய அன்னை தேவாலயத்தின் திருவிழா இன்று ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

தொடர்ந்து நடைபெறும் இத்திருவிழாவில் இறுதி நாளான 27 ஆம் திகதியன்று காலை 7.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (1-78)

# இந்திய வெளிவிவகார அமைச்சருடன் ரோஹித போகொல்லாகம பேச்சு

கொழும்பு, செப். 24

இலங்கையில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தும் விடயம் தொடர்பாக இந்திய வெளி விவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கை வெளி விவகார அமைச்சர் போகொல்லாகமவுடன் ஆராய்ந்துள்ளார்.



ஐக்கிய நாடுகளில் இடம்பெறும் கால நிலை மாநாட்டில் கலந்துகொண்ட வேளையே இரு வெளிவிவகார அமைச்சர்களும் இது குறித்து ஆராய்ந்துள்ளனர்.

இருவருக்கும் இடையிலான கலந்துரையாடல்களில் முக்கியமாக, இடம் பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தும் விடயம் இடம்பெற்றுள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.'

வன்னியில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணி இடம்பெறுகிறது என்றும் அதேவேளை, மீள்குடியேற்றமும் இடம் பெறுகிறது என்றும் இலங்கை அமைச்சர் விளக்கினார் என கிருஷ்ணா தெரிவித்துள்ளார். எனினும், இந்தச் சந்திப்பின் போது அதிகாரப் பகிர்வு குறித்து தான் ஆராயவில்லை என்றும் இலங்கை அரசு மீள்குடியேற்ற விடயங்களில் மும்முரமாக உள் ளது எனவும் கிருஷ்ணா குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

# கண்டபடி அகதி முகாம்களுக்குள் சென்றுவர தொண்டு நிறுவனங்களை அனுமதிக்க முடியாது

## ஐ.நா.மனித உரிமை கவுன்ஸிலில் இலங்கை இடித்துரைப்பு

கொழும்பு, செப். 24

இலங்கையில் உள்ள வவுனியா அகதி முகாம்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் சுதந்திரமாக செல்ல முடியும் என்ற உத்தரவாதத்தை அரசால் வழங்க முடியாத உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஒன்றிய கூட்டத் தொடரில் இலங்கை அரச தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் சிரேஷ்ட இராஜதந்திரிகளில் ஒருவராக கட்மையாற்றும் யு.எல்.எம்.யுஹைர், பாதுகாப்புக் காரணங்களுக்காக வவுனியா அகதி முகாம்களுக்கு முழுச் சுதந்திரத்துடன் செல்ல அரச சார்பற்ற நிறுவனங்களை அனுமதிக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்று இடித்துக் கூறினார்- தெரிவித்தார்.

வவுனியா அகதிகளுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளைச்சுதந்திரமாக வழங்குவதற்கு இலங்கை இடையூறு பண்ணுகிறது என்றும், வவுனியா முகாம்களுக்குச் செல்லும் மனிதாபிமான பணியாளர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்றது என்றும் வவுனியா அகதி முகாம்களிலுள்ள அகதிகளின் நடமாடும் சுதந்திரத்தை நியாயப் படுத்த முடியாத வகையில் மட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் இக்கூட்டத் தொடரில் பங்குபற்றிய அரச சார்பற்ற நிறுவனங்கள், இலங்கை அரசு மீது குற்றஞ் சுமத்தின.

இக்குற்றச்சாட்டுகளுக்கு அங்கு பதிலளித்தபோது, இலங்கைப் பிரதிநிதியான யு.எல்.எம்.யுஹைர், ''அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள் பூரண சுதந்திரத்துடள் முகாம்களுக்குச் செல்லலாம் என எம்மால் எவ்வித உத்தரவாதமும் தரமுடியாது. பாதுகாப்பு விடயங்களே இதற்கான காரணங்களாகும்.

முகாம்களுக்கு வந்து சென்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்களில் முகாமில் இருந்தவர்கள் வெளியே அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இந்த மாதிரியான நடவடிக்கைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக ஐ.நாவுடன் நாம் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டோம். அதன்படிதான் அரச சார்பற்ற நிறுவனங்கள் முகாம்களுக்கு வரும் விடயத்தில் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த வருட இறுதிக்குள் அகதிகளில் அநேகமானவர்கள் தங்கள் சொந்த இடங்களில் வெற்றிகரமாக மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள். மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளுக்கான சர்வதேச சமூகத்தின் உதவிகளை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்'' - என்றார். (அ-சி)

# ப.நோ. கூ. சங்கங்களின் சீர்கேடுகள் காரணமாகவே அவற்றின் நிர்வாகங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

குடாநாட்டில் இயங்கும் ப.நோ.சங்கங்களின் நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பாக கிடைத்த முறைப் பாடுகளை அடுத்து அச்சங்கங்களின் நிர்வாகங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். யாழ். மாவட்டத்தில் இயங்கும் 24 ப.நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், சமாசத் தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இப் படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது :-

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை நியாயமான விலையில் தட்டுப்பாடுகளின்றிக் கிடைக்கச் செய்வதே சங்கங்களின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும். அத்தகைய நோக்கத்தை எட்டுவதற்குச் சீரானதொரு நிர்வாகம் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

கடந்த காலங்களில் நிலவிய சீரற்ற அரசியல் சூழ்நிலை காரணமாகச் சங்கங்களின் அடிப்படைச் சுதந்திரங்கள் பறிக்கப்பட்டு, தன்னிச்சையாக விடுக்கப் பட்ட அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து சங்கங்களின் நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது அத்தகைய் நிலை மாற்றமடைந்து, மக்கள் சுதந்திரமாகப் பேசுவதற்கும், எழுதுவதற்கும், உயிர்வாழ்வதற்குமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதனால், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதையே முதற் கடமையாகக் கொண்டு செயற்படுவதுடன், ஊழல்களுக்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

இன்று கிடைக்கப்பெற்றுள்ள அமைதியுடன் கூடிய சுதந்திரமான இந்த வாழ்க்கையை இனிவரும் காலத்தில் யாருக்கும் தாரைவார்ப்பதற்குத் தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றினை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்குக் கூட்டுறவுத் துறை அமைச்சரையும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்துதரப்படும் - என்றார். (1)

# நவாலி கொத்துக்கட்டி சவாரித்திடலில் பாரம்பரிய மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

சண்டிலிப்பாய், செப்.24

நவாலியூர் பாரம்பரிய மாட்டுச் சவாரிக் கழகத்தினரால் நவாலி கொத்துக்கட்டி சவாரித்திடலில் நடைபெற்ற மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நான்கு பிரிவுகளாக இடம்பெற்றன.

இப்போட்டிகளில் 'ஏ' பிரிவில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த க.தவராசாவும் 'பி' பிரிவில் புத்தூரைச் சேர்ந்த ப.குமாரசாமியும் 'சி' பிரிவில் சங்கரத்தையைச் சேர்ந்த அ.கபின்சன் 'டி' பிரிவில் அராலியைச் சேர்ந்த இலட்சுமி ஆகியோரும் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டனர்.

முதலாம் பரிசாக துவிச்சக்கரவண்டியும் நான்கு முன்னணி வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன.

பாரம்பரிய மாட்டு வண்டிச் சவாரிக் கழகத் தலைவர் நவாலியூர் க.கௌரிகாந்தன், பழம்பெரும் வண்டிச் சவாரியாளரும் மூத்த கழக உறுப்பினருமான தெல்லிப் பழையைச் சேர்ந்த த.மயில்வாகனம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். இலவசமாக நடைபெற்ற இந்தச் சவாரிப் போட்டியில் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். (203-115)

## வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் ஜீ.சி.ஈ (சாதாரண) பரீட்சை பெறுபேற்றை பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 24

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட வன்னியில் 2006 ஆம் 2007 ஆம் ஆண்டுகளில் ஜீ.சி.ஈ சாதரண தரப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப்பெறாத மாணவர்கள் பெறுபேற்றுச் சான்றி தழைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ். கல்விவலயத்திற்குக் கிடைக் கப்பெற்றுள்ளன.

எனவே இதுவரை பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக் கப் பெறாத மாணவர்கள் யாழ். கல்விவலய திட்டமிடற் பிரிவினருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவ[illegible] பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு திட்ட [illegible]ளர் அறிவித்துள்ளனர். (1-9)

# மரண அறிவித்தல்

## இளையதம்பி பொன்னுத்துரை



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பொன்னுத்துரை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இந்திராவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இளையதம்பி- வியாழர் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரி, காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் பாலசிங்கம், செல்லம்மா, காலஞ்சென்ற சற்குணநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயக்குமார், ரோகினி இந்திரகுமார், மாலினி, பவானி, பாலகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சாந்தி, மகேந்திரன், ஜெயக்குமாரி, திருக்குமார், லிங்கநேசன், சுஜித்தா ஆகியோரின் மாமனாரும் கிருஷாந், சுஜானி, ஈசானி, ஆரணி, ரிஷிகேஷன், ராகுல், மொனிஷா, வர்ஷா, அனோஜன், சஞ்சயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிஸை மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (24.09.2009) பகல் ஒரு மணிக்கு வைக்கப்பட்டு பி.ப.4 மணி முதல் 5 மணிவரை இறுக்கிரியைகள் நடைபெற்று 6 மணிக்கு கல்கிஸை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

*இல-27 5/1,*
*டாக்டர் ஈ.ஏ.குரே மாவத்தை,*
*வெள்ளவத்தை.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணத்துக்கு மாற்றப்பட உள்ளன என்று தெரியவருகிறது.

இதற்காக கிழக்கு மாகாணத்தில் சுமார் 20 புனர் வாழ்வு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன என்றும் தெரியவருகிறது. நீதி மற்றும் சட்டமறு சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவை மேற்கோள் காட்டி மேற்படி தகவல்கள் வெளிவந்துள்ளன.

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

பாஸ் வழங்கும் நிலையத்தை ஈரப் பெரிய குளத்துக்கு மாற்றியதால் பயணிகள் பெரும் சிரமங்களையும், நெருக்கடிகளையும் எதிர்நோக்குகின்றனர். நகருக்கும் அந்தப் பகுதிக்கும் இடையில் போக்குவரத்து வசதியில்லாததால் கூடுதல் பணத்தை செலவிட்டு ஓட்டோவில் பயணிகள் அங்கு சென்று பாஸ் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையைத்தவிர்க்க நகரில் பாஸ் நிலையத்தை அமைக்கவேண்டும் என்று கூட்டமைப்பினர் கோரினர்.

பொது மக்கள் வசதி கருதி பாஸ் வழங்கும் நிலையத்தை வவுனியா நகரப்பகுதியில் - தபால் நிலையப்பகுதியில் - இயங்கச் செய்ய நடவடிக்கை எடுப்பதாக பஸில் ராஜபக்ஷ கூட்டமைப்பினரிடம் உறுதியளித்துள்ளார். (அ-1)

## இடம்பெயர்ந்தோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் செய்யவுள்ளார்.

மன்னாரில் கண்ணிவெடி அகற்றும் பிரதேசங்களை பார்வையிட்ட பின்னர் அவர் வவுனியா நலன்புரி நிலையங்களுக்கு சென்று அகதிகளுடன் கலந்துரையாட இருக்கிறார்.

இலங்கையில் ஐந்து நாள்கள் தங்கியிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட முக்கிய அரசியல் தலைவர்கள், அதிகாரிகளுடன் பேச்சுகளை மேற்கொண்டு இடம்பெயர்ந்த மக்களை விரைவில் மீள குடியமர்த்துமாறு வால்டர் கெயின் வலியுறுத்துவார்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படுவது அவசியம் என கெய்லின் வலியுறுத்துவார் என ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடம்பெயர்ந்த மக்களைத் துரிதமாக மீளக்குடியமர்த்துவது என்ற உறுதி மொழியை நிறைவேற்றுமாறு அவர் அழுத்தம் கொடுப்பார் என்றும் ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, அரசின் அழைப்பிலேயே அவர் இலங்கை வருகின்றார். அவரது விஜயத்தில் விசேடமாக எதுவுமில்லை. இந்த தருணத்தில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக எமது முயற்சிகளை அவருக்குக் காண்பிக்க நினைத்தோம் - என மனித உரிமைகளுக்கான அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறினார். (அ-சி)

* கிற் * மொபிரெல் * SLT நெற் * SLT பைல்போர்ட் * SLT citylink
* லங்காபெல் * வீசா IDD
LANKA BELL slt citylink Telecom
அஸ்வினி மலர் பிளாசா
72, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு
அழையுங்கள் : 021 567 7777

படிவம் விற்பனையாகிறது
1. சமூக சேவைகள் திணைக்கள அலுவலக சேவகர் தரம் III க்கான படிவம். (தகமை - O/L)
2. விஞ்ஞான தொழில் நுட்பவியல் அமைச்சில்
I. விஞ்ஞான அலுவலர் வகுப்பு - IV பதவி
II. புக் கீப்பர்-வகுப்பு - III பதவி
III. சாரதி-வகுப்பு - III பதவி
IV. அலுவலக கூலியாள் வகுப்பு - III பதவி
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல, 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## இனிமேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் அமைக்கப்பட இருக்கும் இப்புனர் வாழ்வு முகாம்களுக்கு அருகில் வயல்கள், தோட்டங்கள், தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள் ஆகியனவும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன - என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பினர் மாவை சேனாதிராஜா எம்.பி. நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற இச்சந்திப்பில் மாவை சேனாதிராஜா தலைமையிலான கூட்டமைப்பின் குழு ஒன்று கலந்து கொண்டது.

இது குறித்து மாவை எம்.பி. மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா பூந்தோட்ட அகதி முகாம் ஒன்றில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து நாம் பஸில் ராஜபக்ஷ எம்.பியுடன் கலந்துரையாடினோம். அவர் இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு நடத்தப்படும் என எம்மிடம் தெரிவித்தார். இப்படியான சம்பவங்கள் இனிமேல் நடக்காமல் இருக்க நாம் நடவடிக்கை எடுக்கிறோம் என்றும் எம்மிடம் பஸில் கூறினார்.

## தேசிய மட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது. இதில் யாழ். மாவட்டத்தில் இருந்து பங்குபற்றிய அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி சண்முகராஜா தனுஷா 19 வயதுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் முதலாம் இடம்பெற்று தங்கப்பதக்கத்தை வென்றதுடன் தேசிய மட்டத்தில் ஏற்கனவே இருந்த சாதனையை முறியடித்துப் புதிய சாதனை படைத்தார்.

இவர் நேற்றைய கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 2.81 மீற்றர் உயரத்தைத் தாண்டியதன் மூலம் புதிய சாதனையை ஏற்படுத்தினார். ஏற்கனவே வேறு ஒரு வீராங்கனை இந்தப் போட்டியில் தாண்டிய 2.80 மீற்றர் உயரமே இதுவரை சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையை தனுஷா நேற்று முறியடித்தார்.

இவர் கடந்த ஆண்டு இடம்பெற்ற தேசிய மட்டக் கோலூன்றிப் பாய்தல் போட்டியிலும் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (50-86)

## வவுனியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளே வர முயன்ற வேளை இராணுவத் தினரால் கைதுசெய்யப்பட்டுத் தாக்கப்பட்டார் என்று கூறப்பட்டது. காயங்களுடன் அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதனைத் தொடர்ந்தே பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையே மோதல் மூண்டுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட இடம்பெயர்ந்த மக்கள் இராணுவத்தினர் மீது கற்களை வீசித் தாக்கியுள்ளனர்.

''அகதிமுகாமில் தங்கியிருந்தவர்களில் ஒருவர் முகாமைவிட்டு வெளியே சென்றிருக்கிறார். பின்னர் அவர் மீண்டும் முகாமுக்குள் செல்ல முயன்ற வேளையே இராணுவத்தினர் அவரைக் கைது செய்தனர். இப்போது அவர் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டுவருகிறார்'' என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

''குறித்த நபர் இராணுவத்தினரால் எங்கு கொண்டு செல்லப்பட்டார் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர். இதனையடுத்து பொலிஸார் வைத்தியசாலைக்குச் சென்று அங்கு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த பிரஸ்தாப நபரை வாகனத்தில் ஏற்றிக்கொண்டுவந்து முகாம் மக்களிடம் காண்பித்தனர். இதனையடுத்தே மக்கள் அமைதியடைந்தனர்.'' என்றும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

## வெற்றிலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றிலைக் கேணியில் இருந்து 10 மைல்களுக்கு அப்பால் இவர்கள் தொழிலில் ஈடுபட்டனர். வழமை போல் கூடுதலான மீன்கள் அகப்பட்டதால் மறுநாள் கரைநோக்கி வந்தனர்.

கூடுதலான மீன்கள் வள்ளத்தில் வைக்கப்பட்டிருந்ததால் வள்ளம் கவிழ்ந்தது. மூவரும் கடலுக்குள் மூழ்கினர்.

வள்ளத்தில் இருந்த மண்எண்ணெய் பரலைப் பிடித்துக்கொண்டு நீந்திய வரதராஜாவை கண்டு அந்தப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தென்னிலங்கை மீனவர்கள் அவரைக் காப்பாற்றினர். பின்னர் வடமராட்சி மீனவர்களிடம் கையளித்தனர். அவர் நேற்றுமுன்தினம் உறவினர்களுடன் இணைந்தார். ஆனால் ஏனைய இருவர் குறித்தும் நேற்று மாலை வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

(அ-1-236)

## 3 வருடங்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஜி.எஸ்.பி.பிளஸ்' வரிச்சலுகையை நீடித்துக் கொள்வது தொடர்பில் அரசு தொடர்ச்சியான கொள்கை ஒன்றைப் பின்பற்றி வருகின்றது. அக் கொள்கையில் இருந்து அரசு மாறாது.

2008ஆம் ஆண்டு முதல் 3 வருடங்களுக்கு இச்சலுகையை நீடித்துத்தருமாறு நாம் இந்த வருடம் ஜனவரி மாதம் ஐரோப்பிய ஒன்றியத் திடம் விண்ணப்பித்தோம்.

இது தொடர்பாக எமது தூதுவர்களை அழைத்து அவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளோம். தூதுவர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குமாறு நாம் அதிகாரிகளைப் பணித்துள்ளோம்.

நாம் இறைமையுள்ள நாடு என்பதால் இந்த வருடம் டிசம்பர் மாதமளவில் அரசு இந்த விடயத்தில் தலையிடும். இவ்வரிச்சலுகையைப் பெறுவதற்காக நாம் ஒருபோதும் எம்மை விசாரணைக் குட்படுத்த விரும்பமாட்டோம்'' - என்றார் அமைச்சர் பீரிஸ். (அ-சி)

## ஐ.நா. தலைமையகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகத்திற்கு முன்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ள தருணத்தில் அமெரிக்காவிலுள்ள ஈழத் தமிழர்கள் ஒன்று திரண்டு இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இலங்கையில் முகாம்களில் தங்கவைக்கப் பட்டுள்ள மக்களை அவர்களது பகுதிகளுக்கு விரைவில் செல்ல அனுமதிப்பதற்கான அழுத்தங்களை ஐ.நா. தீவிரப்படுத்த வேண்டுமென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

''இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஐ.நாவால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஐ.நாவால் இலங்கையிலுள்ள தனது சொந்தப் பணியாளர்களைக் கூட காப்பாற்ற முடியவில்லை'' என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் விசனம் தெரிவித்தனர்.

(அ-சி)

## ஜனவரிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்ஸ் நாட்டு தொலைக்காட்சி சேவைகளில் ஒன்றான 'பிரான்ஸ் - 24' இற்கு வழங்கிய விசேட பேட்டியில் இலங்கை விவகாரம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே ஐ.நா. செயலர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் இப் பேட்டியில் இலங்கை விவகாரம் குறித்து மேலும் தெரிவித்துள்ளவையாவன:-

''வவுனியா முகாம்களில் சுமார் 3 லட்சம் தமிழ் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் எதிர்வரும் ஜனவரி மாதத்தின் இறுதிப் பகுதிக்குள் தங்கள் தங்கள் சொந்த இடங்களில் நிச்சயம் மீள்குடியேற்றப்படுவார்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனது விசேட பிரதிநிதியாக அந்நாட்டுக்கு விஜயம் செய்த ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான தலைமைப் பொறுப்பதிகாரி லியன் பாஸ்கோவுக்கு உறுதிமொழி வழங்கியுள்ளார். இது எமக்கு மிகுந்த உற்சாகத்தையும், புத்தூக்கத்தையும் தந்துள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டும் என்பதில் தமக்கு இருக்கும் ஈடுபாட்டை இந்த உறுதிமொழி மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார். இது அவரின் நேர்மையுடன் சம்பந்தப்பட்ட விடயமாக உள்ளது. அவர் இந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கையில் சந்தேகம்கொள்ளவேண்டி ஏற்பட்டுவிடும்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் விடயத்தில் எனது பற்றுறுதியை நன்றாகவே வெளிப்படுத்தி உள்ளேன். எந்தவிதமான கால தாமதமும் இல்லாமல் இந்த அகதிகள் அனைவரும் உடனடியாகத் தங்கள் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும். அவர்களின் மனித உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தேவையான அனைத்து மனிதாபிமான உதவிகளும் உடனடியாக வழங்கப்படவேண்டும் என்றெல்லாம் நான் இலங்கைக்கான விஜயத்தின்போது வலுவான கோரிக்கைகளை முன்வைத்துள்ளேன். எனது பிரதிநிதியாக லியன் பாஸ்கோவை அண்மையில் இலங்கைக்கு அனுப்பி வைத்தேன். இலங்கைக்கான எனது விஜயத்தின் பின் நான் கடந்த அணிசேரா மாநாட்டின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்திருந்தேன். அவர் எனது இலங்கை விஜயத்தின்போது எனக்கு வாக்குறுதி வழங்கியிருந்த விடயங்களைத் தவறாமல் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவருக்கு அங்கு வலியுறுத்திக் கூறினேன். கடந்த வாரம் அவருடன் தொலைபேசியில் கூட உரையாடினேன். அண்மையில் எனது பிரதிநிதி லியன் பாஸ்கோ மூலமாக அவருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளேன். அவர் தமது வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்று நம்புகிறேன்- என்றார். (அ-சி)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
27.09.2009 முன் பதிபவர்களுக்கு விசேட கட்டணச்சலுகை
*MS Office *English*Computerised Accounting
*DTP,Hardware * Web Development
* Video Editing *AutoCAD * VB.net,LINUX
International Courses...
MCP_Microsoft..Professional,Cisco-CCNA,
MCSE_Microsoft...Engineer,ICDL,CIMA
Java programmer(SCJP)
Free Courses ICDL,DHT Sun Java 50%Off
MCS Degree Course
Supported By UNDP/JRRP
* BIT Semester 1,3 & 5,Project
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
324, பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி அருகில்
யாழ்ப்பாணம், 0772395895

பாக்யா இசைப்பயிலகம்
மணியர்பதி வீதி
கொக்குவில் மேற்கு
விஜயதசமி அன்று
இசை, இசைவாத்திய வகுப்புக்கள் ஆரம்பம்
நேரம்: மாலை 3.00 மணி
மிருதங்கம் திங்கள்: 3.00 மணி வெள்ளி: 3.00 மணி
சங்கீதம் செவ்வாய்: 3.00 மணி வியாழன்: 3.00 மணி
ஓகன் செவ்வாய்: 4.00 மணி சனி. 4.00 மணி
வயலின் புதன்: 4.00 மணி ஞாயிறு: 3.30 மணி
பாக்யா காகிதாதிகள்
121, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
தொலைபேசி 021 321 8382

SCIENCE CORNER
Colock Tower Lane, Jaffna.
Biology 2010
நுண்ணங்கி உயிரியல்
ஆரம்பம் - 25.09.2009
நேரம்: Batch I Tue, Fri - 6.30 - 7.30 Am
Batch II Sat, Sun - 10.30 - 1.30 Am
by - பொன்திவாகரன்

தேவை
யாழ்.நகரில் இயங்கும் புத்தக நிலையத்திற்கு விற்பனையாளர்கள் (பெண்கள்) தேவை.
தொடர்பு :
அன்னை புத்தக நிலையம்
இல. 07, ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
222 9881

புதிய பிரிவுகள் ஆரம்பம்
★ aat (Sri Lanka)
Foundation, Intermediate, & Final
Medium :- தமிழ் & English
G.C.E. A/L எடுத்த மாணவர்கள் பதிவினை இதுவரை மேற்கொள்ளாத மாணவர்கள் பதிவினை 29.09.2009 இற்கு முன்னார் மேற்கொள்ளலாம். அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
A/L மாணவர்களுக்கான AAT வகுப்புக்கள் வார நாள்களில் 3 - 5 மணி வரை நடைபெறும்.
★ CHARTERED (பட்டயக்கணக்காளர் நிறுவனம்)
Saturday 26/09/2009 - 9.00 am
★ வங்கியியல் கற்கை நெறிகள் (CBF, DBF)
Medium :- தமிழ் & English
Saturday 26/09/2009 - 8.00 am
★ Certificate Course in English
Week days :- [Mon & Fri] 8.00 am
Week end :- 26.09.2009 [Sat] 8.00 am
★ Sinhala
Week days :- [Mon & Wed] 10.00 am
Week end :- 26.09.2009 [Sat] 10.00 am
Furthur Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

பருத்தித்துறையில்
இன்ரநெற், ஈ மெயில்
முற்றிலும் இலவசம்
INTERNET
BROWSING & E-MAIL
FULL FREE
JEYENTHA COMPUTER PARK
THE IT DIVISION OF
JEYENTHA INDUSTRIAL PARK
(PVT) LTD
75/22, THUMPALAI ROAD,
SIVANKOVILADY,
POINT PEDRO,
PHONE : 021 742 9015,
FAX : 021 742 9016,

உடன்தேவை-மொழிபெயர்ப்பாளர்கள்
சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் திறமையும் அனுபவமும் உள்ளவர்கள் தேவை. கட்டுரைகள், செய்திகள் மற்றும் துறைசார் ஆவணங்களை மொழிபெயர்ப்பதில் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது. தமிழ் மொழிநடை இலகுவானதாகவும் எளிமை மற்றும் நயம் நிறைந்ததாகவும் அமைவது விரும்பத்தக்கது.
முழு நேரமாகவோ பகுதிநேரமாகவோ பணியாற்ற வசதி செய்து தரப்படும்.
கல்வித் தகைமை மற்றும் மொழிபெயர்ப்பு அனுபவங்களைக் குறிப்பிட்டு சிபார்சு செய்யக்கூடிய இருவரிடமிருந்து பெற்ற நற்சான்றிதழ்களுடன் 30.09.2009 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.வயதெல்லை: 58
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
பிரதம ஆசிரியர்,
உதயன் -
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




# மாவட்ட வலம் - திருமலை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I 22-T-I

01. ''பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்வார் மருள் தீர்ந்த மாசறு காட்சி யாவர்'' இதில் மருள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. அறிவு 2. பொருள் 3. குற்றம் 4. மயக்கம்

02. பேற்றிலே மிரும் ஒருவன் புல்லரிடம் அகப்பட்டால் பிழைகள் செய்வர். இதில் புலவர் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. நல்லவர் 2. ஒழுக்கமற்றவர் 3. வல்லவர் 4. வலிமையானவர்

03. "விசையுறு பந்தினைப் போல் உள்ளம் வேண்டியபடி செல்லும் உளம் கேட்டேன்" என்ற பாரதியார் பாடலில் விசை என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்
1. கோபமாக 2. மெதுவாக 3. வேகமாக 4. சாந்தமாக

04. "புராதனமான தமிழ்ப் புலவரிந்தப் புன்குரங்கு" என்ற இரட்டையர் பாடலில் உள்ள புராதனம் என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்
1. நவீனம் 2. பழைமையான 3. பண்டைய 4. தற்காலம்

05. சுறியல் பார்வையானது வாழ்க்கையின் பல பரிமாணங்களைக் கற்றுப் புதிய கோணத்தில் பார்த்திருக்கும் வாய்ப்புக்களைப் படைக்கும் வாயில்களைத் திறக்கும் இயற்கையைக் கொண்டது. இங்கு பரிமாணம் என்பது,
1. அழகு 2. அளவு 3. வடிவம் 4. வண்ணம்

06. தனது நண்பர் வறுமையுற்றபோது அவுர் உதவினார். இங்கு ஆபத்து நேரத்தில் உதவுதல் என்ற கருத்தைத் தரும் மரபுத்தொடர்,
1. தோள் கொடுத்தல். 2. தோள் மாற்றுதல்
3. கையறுதல் 4. கைகலத்தல்

07. வன்னிப் பிரதேசத்தில் அகதிகளாக நின்ற சிறுவர், சிறுமிகளில் இன்று அநேகமானோர் அநாதைகளாகி விட்டனர். அநாதை என்பது,
1. பொருள் பண்டங்களை இழந்தோர் 2. வீடு வாசல்களை இழந்தவர்
3. தாய் தந்தையரை இழந்தவர்
4. காணி நிலம், வீடு வாசல்களை இழந்தவர்

08. இல்லையென்று கூறாது வாரி வழங்கும் செயலைக் குறிப்பது
1. சோமாளித்தனம் 2. வள்ளன்மை
3. ஊதாரித்தனம் 4. உலோபத்தனம்

09. அநாதரவாய் விடப்பட்ட சிறுவர்களை கண்ணெடுத்துப் பார்த்தல் வேண்டும். கண்ணெடுத்துப் பார்த்தல் என்பது,
1. அருள் செய்தல் 2. அவதானித்துப் பார்த்தல்
3. மேலோட்டமாகப் பார்த்தல் 4. ஆழமாகப் பார்த்தல்

10. உப்பட்டி என்ற சொல்லை எந்தச் சமூகத்தினது கிளைமொழிச் சொல்லாகக் கருதலாம்?
1. மீனவ சமூகம் 2. கூலித் தொழிலாளர் சமூகம்
3. விவசாயச் சமூகம் 4. சேரிப்புறச் சமூகம்

11. நிறைவான புலமையில்லாத ஒருவனை மக்கள் புகழ்ந்து பேசுவதற்கு பொருத்தமான பழமொழி
1. ஆனைக்கும் அடி சறுக்கும்.
2. அற்பனுக்கு பவுசு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்.
3. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை.
4. எட்டி பழந்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன.

12. மனதில் பொறாமை, வஞ்சகம் போன்ற தீய எண்ணங்களைக் கொண்டு அன்பான இனிய வார்த்தையுடன் உரையாடுபவர்க்கு பொருத்தமான உவமைத்தொடர்,
1. யதார்த்தவாதி வெகுசன விரோதி.
2. அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்.
3. இக்கரை மாட்டிற்கு அக்கரைப் பச்சை.
4. வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை.

13. பனையின் இலையை ஓலை என அழைப்பர், அதுபோல் வெங்காயத்தின் இலை,
1. தாளை 2. தாள் 3. இலை 4. ஓலை

14. கத்தரியின் இளையது கன்று எனப்படுவது போல நெல்லின் இளையது
1. கன்று 2. பிள்ளை 3. நாற்று 4. சிப்பம்

15. பாராளுமன்றக் கூட்டத் தொடர் அமளிதுமளிப்பட்டது, அமளிதுமளி என்ற இணைமொழியின் கருத்தின் மற்றொரு இணைமொழி,
1. அல்லோல கல்லோலம் 2. இடக்கு முடக்கு
3. திக்குமுக்கு 4. கோணல் மாணல்

16. சிறுவனது இருதய சத்திர சிகிச்சைக்கு ஜனாதிபதி .............................. குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்டது.
1. இழப்பீடு 2. நிதியத்திலிருந்து
3. மானியத்திலிருந்து 4. வரியிலிருந்து

17. விவசாயிகள் தமது பயிர் அழிவடைந்ததால் அதற்கான ............................ பணத்தைப் பெற்றுக்கொண்டனர்
1. காப்பறுதி 2. கைக்கூலி 3. வேதனம் 4. சன்மானம்

18. எமது சமய மொழி .................... பண்பாடுகளை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும்.
1. கலாச்சார 2. கழாச்சார 3. கலாசார 4. களாசார

19. பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிடம் வர்த்தக ..........................உரிமை இருந்தது.
1. பொதுவுடமை 2. சான்றிதழ் 3. ஏகபோகம் 4. பிரசுரம்

20. இருபாற் பொதுப் பெயராக அமையாத சொல்
1. உலோபி 2. அறிவாளி 3. செவிலி 4. நோயாளி

21. என்ன நம் குடும்பங்கள் காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும் பஞ்சுத் தலையணையா? என்ற கவிதைத் தொடரில் விதிக்குரங்கு என்பது,
1. உவமை அணி 2. உயர்வுநவிழ்ச்சி அணி
3. உருவக அணி 4. வேற்றுமை அணி

22. த்னது மகனைக் கொன்றவனை தந்தையார் தேடித் திரிந்தார். இங்கு கொன்றவனை என்பது,
1. இருபெயரொட்டு பண்புப் பெயர் 2. வினையாலணையும் பெயர்
3. பொருட் பெயர் 4. அன்மொழித் தொகை

23. இராணுவத்தினரின் எறிகணை வீச்சுகரு பல்லாயிரக்கணக்கான மக்கள் இரையாகினர் என்பதில் எறிகணை என்பது,
1. உவமைத் தொகை 2. உம்மைத் தொகை
3. வேற்றுமைத் தொகை 4. வினைத் தொகை

24. கண்ணன் உழைப்பால் உயர்ந்தவன் இங்கு ஆல் உருபு பெற்று வந்த பொருள்
1. கருவிப் பொருள் 2. கருத்தாப் பொருள்
3. காரணப் பொருள் 4. மூலப் பொருள்

25. பசியால் நடந்து வந்த பெரியவர் உணவை உண்டார். இங்கு பெயரெச்சம் வருபது
1. பசியால் 2. நடந்து 3. வந்த 4. பெரியவர்

26. பின்வருவனவற்றில் வழூஉச் சொல்லாக அமைவது,
1. ஈர்க்கு 2. பயிற்சி 3. எண்ணெய் 4. கரிசனை

27. எதிர்கால இடைநிலையான 'வ்' பெற்று வருவது,
1. படிப்பான் 2. செல்வான் 3. உண்பான் 4. சொல்லல்

28. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக என்பதில் எழுதுக என்பது,
1. வினை தொகை 2. வினையாலணையும் பெயர்
3. வியங்கோள் வினை 4. வினையெச்சம்

29. மாருகன் மாலையில் வீட்டிற்கு வந்தது. இவ்வாக்கியத்தின் வழு,
1. பால்வழு 2. சால வழு 3. மரபு வழு 4. எண்வழு

30. 'கு' உருபுக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய சொல்லுருபு,
1. ஆக 2. விட 3. காட்டிலும் 4. உடைய

31. நானும் நீயும் அவனும் நாளைக்குப் பாடசாலைக்குச்
1. சென்றோம் 2. செல்வோம் 3. வந்தோம் 4. வருவேன்

32. கம்பராமாயணத்தில் உள்ள ஒவ்வொரு பாடலும்
1. சிறப்புடையன 2. சிறப்புடையது
3. சிறப்புடையவை 4. சிறப்புடையவைகள்

33. இன்று விற்கப்பட்ட தேங்காய்கள் ஒவ்வொன்றும்
1. நல்லது 2. நல்லன 3. நல்லவை 4. நல்லவைகள்

34. ஒண்டார் என்பதை பிரித்து எழுதினால்
1. ஒண்+டார் 2. ஒண் +தார் 3. ஒன்று+தார் 4. ஒண்று+டார்

35. பின்வருவனவற்றில் சரியாக எழுதப்பட்ட வடிவம்,
1. கமலா குறள்பா பாடினாள். 2. கமலா குறல்பா பாடினாள்.
3. கமலா குறட்பா பாடினாள். 4. கமலா குரள்பா பாடினாள்.

36. எ..கிய பஞ்சினைப் போல
தமிழ் எல்லாள மன்னன் இருதயம் போல
லெ..கிய வெண்முகிற் கூட்டம்
இந்து மேய எழுந்திடுமன்றே. இப்பாடலில் ஆசிரியர் கூறவந்த பொருள்,
1. இந்து சமுத்திரம் 2. எல்லாள மன்னன்
3. வெண்முகில் 4. பஞ்சு

37. இப்பாடலில் காணப்படும் அணி,
1. உருவக அணி 2. உவமை அணி
3. சிலேடை 4. தற்குறிப்பேற்ற அணி

38. இப்பாடலில் வந்துள்ள உவமானம்
1. பஞ்சு கூட்டம் 2. இந்து
3. வெண்முகில் கூட்டம் 4. பஞ்சு, எல்லாள மன்னன்

39. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள உவமேயம்
1. பஞ்சு 2. உள்ளம் 3. வெண்முகில் 4. எல்லாள மன்னன்

40. எ..கிய என்பதன் பொருள்
1. இரும்பு 2. இளகிய 3. அழகிய 4. புதிய

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II 22-T-II

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01. 1. தொழில் முறைக் கடிதத்திற்கும் உறவுமுறைக் கடிதத்திற்குமுள்ள வேறுபாடுகள் இரண்டு தருக?
2. கடிதமொன்றில் அமைய வேண்டிய உறுப்புக்கள் 4 தருக?
3. ஏகார இடைச் சொல் பெற்று வரும் பொருள் 4 தருக?
4. முன்னிலைப் பன்மைப் பெயருக்கு ஓர் உதாரணம் தருக?
5. கட்டுரை எழுதும்போது தவிர்க்க வேண்டிய விடயங்கள் 4 தருக?
6. உலக சிறுகதை முன்னோடிகள் மூவரைக் குறிப்பிடுக?
7. கடி எனும் உரிச்சொல் ஏற்கக்கூடிய 4 பொருள்களைத் தருக?
8. உயிரில்லா பொருட்களின் குணப்பண்பாகிய ஐவகை நிறங்களும் எவை?
9. 2ஆம் வேற்றுமைப் பொருள் ஆறையும் தருக?
10. செய்யுள் ஒன்றை வாசித்து பொருளை விளக்கிக் கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய செயற்பாட்டை ஒழுங்கு முறையில் எழுதுக?

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக.
1. இன்றைய இளைஞர்கள் எதிர்காலத்தில் நாட்டின் நற்பிரசைகளாக திகழ அவர்களுக்கு தகுதிகாண் தலைமைத்துவம் வழங்கப்படல் வேண்டும். அன்பு, இரக்கம், பொறாமை போன்ற விழுமியக் கருத்துக்கள் அவர்கள் மனதில் புகுத்தப்படல் வேண்டும். சிறுவர் முதல் பெரியோர் வரையும் அனைவரையும் அரவணைத்து ஆதரவு வழங்குபவர்களாக இளைஞர்கள் பழக்கப்படல் வேண்டும். அவ்வகையில் இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்று பொருள் அமையும் வண்ணம் கட்டுரையொன்று வரைக.
2. 2050ஆம் ஆண்டில் இன்றைய உலகம் எவ்வாறு அமையும் என்ற கற்பனைக் கட்டுரை வரைக.
3. இன்றைய உலகம் நவீன விஞ்ஞானத்தின் விந்தைகளால் நிறைந்துள்ளது. இத்தகைய விஞ்ஞான வளர்ச்சியால் நாம் அடையும் நன்மைகள் ஏராளம். ஆனால், அதேவேளை விஞ்ஞான வளர்ச்சியே அழிவுக்கு காரணமாகவுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞானத்தின் நன்மை தீமைகள் பற்றி இருவருக்கிடையில் இடம்பெற்ற உரையாடல் ஒன்று எழுதுக.
4. "உண்மை உயர்வு தரும்" என்ற கருத்துப் புலப்படும் வகையில் சிறுகதை ஒன்று எழுதுக.

03. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.
பணிவுடையன் இன்சொலன் ஆதல் தான் மனிதர்க்கு சிறந்த அணிகலன்கள் இனிய சொற்களை பேசுவதால் யாது பயன் எனில், அல்லவை தேயும், அறம் பெருகும் என்கிறார் வள்ளுவர். மனித வாழ்க்கை சிறப்பாகவும் செம்மையாகவும் அமைவதற்கு சமுதாயத்தில் அல்லவை யாவும் மறைய வேண்டும். தர்மங்கள் நீதி ஓங்க வேண்டும். இத்தகைய உயர்ந்த விழுமிய நிலையினை இன்சொற்களை ஈவதால் பெற்றுக்கொள்ள முடியுமாகில் நிச்சயமாக இன்சொற்களையே நாம் என்றும் பயன்படுத்த வேண்டும். இத்தகைய இன்சொற்களை 'செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்' என்றும், 'பண்பின் தலை பிரியாச் சொல்' என்றும், 'சிறுமையுள் நீங்கிய சொல்' என்றும் வள்ளுவர் ஏற்றியும் போற்றியும் பேசுகின்றார்.

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச்சுடரின் தொடர்ச்சி......

1. இப்பந்திக்கு பொருத்தமான தலைப்பு ஒன்றினை எழுதுக?
2. தலைப்பை சிறப்பாக விளக்குவதற்கு ஆசிரியர் திருக்குறளில் எடுத்துக் காட்டிய சுட்டிகள் மூன்றினைத் தருக?
3. நாம் எத்தகைய சொற்களைப் பேசுதல் வேண்டும்? அதனால் ஏற்படும் நன்மைகள் எவை?
4. பின்வரும் சொற்களுக்கான அருஞ்சொற்களை எழுதுக?
   1. அல்லவை 2. செம்மை 3. விழுமியம்
5. இதில் எடுத்துக் காட்டப்பட்ட சிறந்த மானுடப் பண்புகளை எழுதுக?

04. விபத்தொன்றினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் இருக்கும் உமது நண்பனுக்கு ஆறுதலளிக்கும் வகையில் கடிதம் ஒன்று எழுதுக?

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III 22-T-II

* முதலாம், 2ஆம், 3ஆம், 4ஆம் வினாக்கள் உட்பட 5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களில் ஒன்றினைத் தெரிந்து மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

01. சுருக்கமான விடை எழுதுக.
1. தோயும் திரைகள் அலைப்பத் தோடார் கமலப்பள்ளி. இதில் கமலப்பள்ளி என்பதை விளக்குக?
2. தாய் முகம் கண்ட சேய் போல மனம் களித்தி அந்த நீரை பருகினர். இதில் வந்துள்ள அணி எது? அதனை விளக்குக?
3. படைவேன் பழிக்கு அஞ்சும். இதில் படைவேன் பழி என்பன எவற்றைக் குறிக்கின்றன?
4. 'காளீ! உன்னிடத்து வருகின்றேன், இன்னும் வரவில்லையே! என் செய்வேன்' இப்படிக் கூறியவர் யார்? யார் வரவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது?
5. 'என் உடல் பொருள் ஆவி மூன்றையும் என் பாதத்திலே சமர்ப்பிக்கின்றேன்' யாரால் யாருக்கு என்ன பாடத்தில் கூறப்பட்டது?
6. நிழலின் நினைவுகள் பாடலை எழுதியவர் யார்? பாடலின் மையக் கருத்து யாது?
7. கடற்புறப் பாட்டின் வறுமைத் தோற்றம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
8. பாலோ டளாயநீர் பாலாகும்...... என்ற நாலடியார் பாடல் கூறும் அறக்கருத்து யாது?
9. கவிச்சக்கரவர்த்தி கம்பர் நாடகத்தில் சோழ மன்னன் திரிபுவனத்தில் ஆலயம் கட்ட நினைத்தமைக்கான காரணங்கள் எவை?
10. அப்பா நட்சத்திரங்களுக்குக்கூட அப்பா உண்டோ, இக்கூற்றில் இடம்பெற வேண்டிய நிறுத்தக் குறிகளை இடுக?

02. பின்வரும் பாடல்கள் உரைநடைப் பகுதிகளைப் படித்து அவற்றின் பொருளையும் அடிக்கோடிட்ட பகுதியின் சிறப்பினையும் தருக.

1. விண்ணரச் ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்க
குண்ணகல ஞாலம் களிகூர - மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினான் பொன்.

2. தான் செய் குழியின் தனக்கே யெனவறிந்தும்
ஏன் பிறர்க்கானகேடு சூழ்கின்றான் - மீகண்ணாய்
யானை தலைமேல் தன்கையால் மண்ணள்ளித்
தானே எறிவதே போன்று

3. நகை நலம் நட்டார்கண் தந்துஞ் சிறந்த
அவை நல் அன்பின் விளங்கும் விசைமாண்ட
தேர் நலம் பாகனாற் பாடெய்தும் ஊர் நலம்
உள்ளாலை உள்ளப்படும்.

4. கலைமகள் அருளைப் பெற்ற உண்மை கவிவாணப் பாடிய பாடல்கள் அனைத்தும் நலன் நிறைந்த நீர்மயனவோயாம். இந்திய நாடு செய்த தவத்தின் பயனாக சுப்பிரமணிய பாரதியார் வாணியின் அநுக்கிரகத்தைப் பெற்றவராக விளங்கினார். இவர் விளுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் கொண்ட இன்தமிழ்ப் பாடல்கள் பலவற்றைப் பாடி உலகிற்கு அளித்துள்ளார்.

5. இலக்கணத்தில் முழுத்தேர்ச்சி பெற்று விட்டால் மட்டிலும் எப்படி இலக்கிய நயமுள்ள கவிதையை இயற்றிவிட முடியாதோ, அதேபோல தான் சிறுகதையின் வரம்புகளை அறிவதால் மட்டும் எழுதி விட முடியாது. சிறுகதைக்கான புற ஒழுங்கு விதிகள் இல்லை. ஆனால், பிறவகை இலக்கியப் படைப்பைப் போலவே சிறுகதையும் உயிர்த்துடிப்புள்ளது.

03. நளவெண்பா சுயம்வரக் காண்டப் பகுதியில் நளனின் அழகு, வீரம், தமயந்தியின் மனோநிலை, தமயந்தியின் விவேகம் என்பன சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றை விவரிக்க?
அல்லது
முன்னோர்க்கு என்ற கவிதையில் கவிஞர் முருகையன் கூறிச் செல்லும் கருத்துக்களும், அணிச் சிறப்புக்களும் பற்றி ஆராய்க?

04. பார்வைகள் என்ற சிறுகதை ஆசிரியர் யார்? இவர் எடுத்துக்கொண்ட கதைக் கரு என்பவற்றையும், தருமத்தின் குணவியல்பு, பெரியடாக்டரின் குணவியல்பு என்பவற்றையும் ஆராய்க? அல்லது
கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் மையக்கருத்து யாது? இங்கு காணப்பட்ட பாத்திரங்களான ஒட்டகக் கூத்து, கம்பர், குமாரப்புலவர் ஆகியோரின் குண்வியல்புகளை சித்திரிக்குக?

05.
1. திருக்குறளில் செங்கோண்மை, கொடுங்கோண்மை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறிய விளக்கங்கள் எவை?
2. பரந்த திறலாரை..... என்ற பழமொழி நானூறில் முண்டுரை அரையனார் கூறியவற்றை விளக்குக?

06. நந்திக்கனம் பாகத்தில்
1. செவிலி இரகஸ்யத் தன்மை சித்திரிக்கப்பட்டுள்ளதை விளக்குக?
2. நந்திவர்மனின் சிறப்புக்களும், காதல் உணர்வுகளும் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன?

07.
1. ஔவையார், நாலடியார் கூறும் அறக்கருத்துக்கள், நீதிக்கருத்துக்கள் எவை?
2. நாட்டார் பாடல்களில் தொழிற்பாடல், கிட்டியாடித்தல், மீன்பிடிக்காரர் பாடல்களில் காணப்படும் பல்வேறு சிறப்பம்சங்களைத் தருக?

-நிறைவுற்றது-

தொகுப்பு: திரு.G.யோகேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர்),
திருகோணமலை.
தொ.பே: 026-2224601



வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் 15 வயதினரின் பிரிவில் தட்டெறிதலில் 2 ஆம் இடத்தைப் பெற்ற செல்வி ரீ.விதுசனா, 17 வயதினரின் பிரிவில் ஈட்டி எறிதலில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் பெற்ற செல்வி எஸ். ஜானகி, 21 வயதுப் பிரிவில் 1500 மீற்றர் ஓட்டத்தில் 3 ஆம் இடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தைப்பெற்ற செல்வி ஜெ.பூரணி ஆகிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவர்களைப் படத்தில் காணலாம்.

**தேசியமட்ட ஹொக்கிப் போட்டியில் யா/குளமங்கால் றோ.க.வித்தியாலய 19 வயது பிரிவு அணியினர் பங்குபற்றினர். விளையாட்டுத் துணை அமைச்சருடன் பொறுப்பாசிரியர் நா. துசியந்தன் மற்றும் வீராங்கனைகளையும் படத்தில் காணலாம்.**





பிரதேச மட்டப் பேச்சுப் போட்டியின் போது முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட அரசடி ஞானக் குழந்தை இல்ல மாணவன் செல்வன் விஜயகுமார் நித்திய ரூப சர்மாவிற்கு அங்கு நடந்த நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். விமலநாதன் பரிசில் வழங்கிக் கௌரவிக்கிறார்.

யாழ்.சித்த மருத்துவபீடமும் யாழ். வலயக் கல்வித் திணைக்களமும் இணைந்து உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் மூலிகை கருத்தரங்கை நடத்தனர். சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் அசோகாபீரிஸ் மங்கள விளக்கேற்றுவதையும் வித்தியாலய அதிபர் மு.விக்கினேஸ்வரன் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி மல்காந்தி எக்கநாயக்க மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள், மாணவர்களையும் படத்தில் காணலாம்.



**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் 22 வருடங்களாக ஆசிரியராக சேவையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற திருமதி புஸ்பராணி இராஜலிங்கத்தின் சேவையைப் பாராட்டி நடைபெற்ற விழாவில் பொன்னாடை போர்த்து, பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டார். அவ்விழாவில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் [illegible]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org